

పండిత డి. గోపాలాచార్యులు, ఎ. వి. ఎస్.

சென்னை ஆயுர்வேத காலேஜ் ஸ்த்தாபகரும், அதன் ப்ரின்ஸிபாலுமான
வைத்தியரத்ன, பண்டித டி. கோபாலாசார்லு.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

ஒரு மாதாந்தர வைத்திய—சுகாதாரப் பத்திரிகை.

# THE VAIDYA KALANIDHI

**A Tamil Monthly Journal of Medicine, Hygiene and Sanitation.**

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600 090.

EDITED BY
**Ayurveda Bhushan**
**Pandit M. DURAISWAMI AIYANGAR,**
...lomæd Ayurvedic Doctor; Physician, S. K. P. D. Hospital;
Author of Sarngadhara Samhita, Ashtangahridaya,
Kadambari, Meghasandesa (in Tamil) etc., etc.

மூன்றாம் புஸ்தகம்.

[ராக்ஷஸ வருஷ ஆவணி மீ முதல் நள வருஷ ஆடி மீ வரையில்.]

## Vol. III.

**[From September 1915 to August 1916.]**

MADRAS:
The "Vaidya Kalanidhi" Office
1916

விலை ரு. 4-4-0.] [Price Rs. 4-4-0.

[All Rights Reserved.]

# சார்ங்கதர ஸம்ஹிதை.

## பிராசீன ஸம்ஸ்கிருத வைத்தியக் கிரந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

இப்புஸ்தகத்தின் விசேஷங்கள் :—

1. ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத ஸம்பந்தமான விஷயங்களைச் சுருக்கமாக அறிய விரும்புபவருக்கு இப்புஸ்தகம் மிக்க உபயோககரமாயிருக்கும்.

2. முதன்முதல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழில் வெளியான ஆயுர்வேத வைத்திய நூல் இச்சார்ங்கதரஸம்ஹிதையே.

3. இதில் ஆயுர்வேத ஸம்பந்தமான பரிபாஷைகளும், ரோகங்களின் அட்டவணையும், சூர்ணம், லேஹ்யம், தைலம், கிருதம், ஆஸவம், அரி… பஸ்மம், குளிகைகள் முதலிய பலவிதமான ஔஷதமுறைகளைச் … விதங்களும், ஸ்நேஹநம், ஸ்வேதநம், விரேசநம், வஸ்தி, வாஜீகரணம் மு… அநேக வகையான சிகித்ஸாக்ரமங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

4. ஸம்ஸ்கிருத சார்ங்கதர ஸம்ஹிதையிலுள்ள விஷயங்களில் ஒவ்வொரு பதமும் விடாமல் எளிய தமிழ்வாசகத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

5. ஸம்ஸ்கிருத வைத்திய பரிபாஷைமுதலியவற்றை அனைவரும் அறியுமாறு நன்கு விளக்குவதற்கு ஒவ்வொரு பக்கத்திலும் விரிவாக டிப்பணியும் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது.

6. ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொரு விஷயத்திற்கும் பெரிய எழுத்துக்களில் தலையங்கங்கள் போடப்பட்டிருப்பதுடன், இதிலடங்கிய எவ்விஷயத்தையும் உடனே பார்ப்பதற்கு உபயோகமாகும்படி விஷய அகராதியும் விவரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

7. இதில் அடங்கிய விஷயங்களைக் கொண்டும் அச்சிடப்பட்டுள்ள மாதிரியைக்கொண்டும், பைண்டின் அழகைக்கொண்டும் இதை ஒவ்வொருவரும் தற்காலத்திற்கு இன்றியமையாத புஸ்தகமென்றே மதிப்பார்கள்.

| | | |
|---|---|---|
| வைத்தியகலாநிதி சந்தாதாரர்களுக்கு | விலை ரூ. | 2-8-0. |
| பிறருக்கு | விலை ரூ. | 3-0-0. |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேபேரி போஸ்ட், மதராஸ்.

IV
2625
XX A-59 3

# INDEX.

(FOR THIRD VOLUME.)

## ORIGINAL ARTICLES.


| ARTICLES. | CONTRIBUTORS. | PAGE. |
|---|---|---|
| An Efficient Method of Preventing Deaths from Burns ... | Ramanarayan, L. M. & S. ... | 27 |
| A Short Sketch of Ancient Medical Works ... | Hakim M. K. Syed Muhamed Pulawar ... | 176 |
| A Word to the Western Doctors ... | Mahamahopadhyaya Kaviraj Gananath Sen, M. A., L. & M. S., Vidya Nidhi ... | 121 |
| Ayurveda ... | P. Ramakrishna Aiyar, B. A., Ayurvedic Physician ... | 52 |
| Banana as Food ... | A. M. Masilamani Mudaliar, L. M. & S... | 25 |
| Bath and its Therapeutic Uses ... | M. Madhava Menan, Ayurveda Bhushan ... | 100 |
| Bran and its Therapeutic Value ... | J. V. Ramaswami Naidu, L. M. & S. ... | 73 |
| Charges against Ayurveda ... | Mahamahopadhyaya, Kaviraj Gananath Sen, M. A., L. M. & S. ... | 97 |
| Cold in the Head ... | K. Subrahmanya Aiyar, Ayurvedic Physician ... | 193 |
| Control of Communicable Diseases ... | Ramanarayan, L. M. & S. ... | 76 |
| Datura and its Uses ... | M. S. Aiyangar, Ayurvedic Physician. | 28 |
| Diarrhœa and its Treatment ... | A. Lakshmipathi, B. A, M. B. & C. M. | 251 |
| Earache and its Treatment ... | S. Krishnaswami Vaidyar ... | 10 |
| Enlargement of the Spleen and Liver ... | U. S. Jagadisa Aiyar, Physician & Surgeon ... | 189 |
| Exercise in the Treatment of Diabetes ... | Ramanarayan, L. M. & S. ... | 123 |
| Guinea-worm Disease ... | Ramanarayan, L M. & S. | 191 |
| Gun-shot Wounds ... | M. S. Aiyangar, Ayurvedic Physician... | 7 |
| Habits and their Effects ... | T. A. Agastya Sarma, Physician & Surgeon | ...230,254 |
| Health and Education ... | M. S. Aiyangar, Ayurvedic Physician... | 54 |
| Health of Children ... | Rao Bahadur Dr. C. B. Rama Rao, B.A., M.D. ... | 156 |
| Holidays and their Uses ... | M. S. Aiyangar, Ayurvedic Physician. | 194 |
| How to Diagnose the Diseases ... | P. G. Ganapati Sastri, Ayurveda Bhushan ... | 57 |
| How to Use Cow's Milk for Children ... | J. V. Ramaswami Naidu, L. M. & S. ... | 229 |
| Hygiene in Elementary Schools ... | E. R. Sankara Aiyar, Ayurvedic Doctor ... | 29 |
| Method of Medical Inspection of Schools ... | J. V. Ramaswami Naidu, L. M. & S. ... | 169 |
| Natural Mineral Waters ... | A. M. Masilamani Mudaliar, L. M. & S. | 1 |
| Our Enemy Intemperance ... | M. S. Aiyangar, Ayurvedic Physician. | 172 |
| Palpitation of the Heart ... | A. Kesava Sarma, Ayurvedic Physician ... | 145 |
| Physical Effects of Alcohol ... | K. Vijayarangam, Ayurvedic Physician ... | 77 |
| Prevention of Old Age ... | V. Kuppuswami Naidu, Medical Practitioner ... | 174 |

| | | PAGE. |
|---|---|---|
| Small-pox and the Importance of Vaccination ... | B. Ethirajulu Naidu, L. M. & S. ... | 107 |
| The Benefits of Learning of Hygienic Principles for Women ... | K. Rajagopala Chariar, B. A. ... | 151 |
| The Claims and Ideal of Hindu Medicine ... | Mahamahopadhayaya Kaviraj Gananath Sen M. A., L. M. & S. ... | 250 |
| The Common Bilious Attack ... | K. Subrahmanyam, Ayurvedic Physician ... | 3 |
| The Diagnosis of Pulmonary Tuberculosis ... | C. Krishna Reddy, B. A., M. B. & C.M. | 49 |
| The Government and the Indigenous Systems of Medicine ... | P. R. Sarma, Medical Practitioner ... | 211 |
| The Hygienic Value of Occasional Change of Diet ... | M. S. Aiyangar, Ayurvedic Physician. | 124 |
| The Method of Medical Inspection of Schools... | J. V. Ramaswami Naidu, L. M. & S. ... | 209 |
| The Progress of the Ayurvedic System of Medicine ... | K. S. Duraiswami Pandithar, Ayurvedic Physician ... | 80 |
| The Soldiers' Temperance League ... | V. Kannan Nambiyar, Medical Practitioner ... | 216 |
| The Superiority of Humanity and its Preservation ... | Prof. Rajagopala Aiyar, M. A. ... | 233 |
| The Use of Flow of Tears ... | K. Rama Sastri, Ayurvedic Physician. | 213 |
| Tubercular Glands of the Neck ... | C. H. Huyton, B. A., M. D. ... | 140 |
| Ways of Health ... | H. E. Biler, D. D. S. ... | 104 |


## LEADING ARTICLES.


| | PAGE. |
|---|---|
| A Brief Historical Survey of Ayurvedic Literature ... | 238 |
| An Appeal to Our Subscribers ... | 260 |
| A New Ayurvedic Free Dispensary at Tirupur ... | 16 |
| Backache ... | 36 |
| Beal and its Medicinal Properties ... | 127 |
| Care of Cataract Treatment ... | 11 |
| Catechism on Hygiene ... | 220 |
| Diabetes and its Treatment ... | 31 |
| Drug Drinking Folly ... | 132 |
| Drugs and Medicines, 20, 42, 68, 91, 117, 132, 163, 185, 205, 226, 244, 265. | |
| Fever is not a Disease ... | 180 |
| First Aid in Accidents, 19, 37, 63, 87, 115, 134, 161, 181, 202, 225, 242, 262. | |
| Hygienic Life of Our People ... | 198 |
| Indian Drugs Worth Trying ... | 82 |
| Is Sunshine Beneficial ? ... | 160 |
| Lessons on Temperance ... | 33 |
| Malaria in Madras ... | 133 |
| Medical Instruction in Vernaculars ... | 178 |
| Medical Registration Act ... | 134 |
| Military Life and Physical Health ... | 17 |
| Notes and Items of Interest, 23, 46, 71, 95, 119, 144 166, 187, 208, 228, 247, 268. | |
| Prevention of Typhoid Fever ... | 240 |
| The Crippled Heart ... | 257 |
| The Hospital Treatment ... | 112 |
| The Lost Ayurvedic Literature ... | 157 |
| The Madras Medical Council ... | 85 |
| The Milk and its Adulteration ... | 201 |
| The Present State of Ayurveda and the Need for Reform ... | 217 |
| The Seventh All-India Ayurvedic Conference and Exhibition ... | 17 |
| Views of Sir P. Lakis on Indigenous Systems of Medicine ... | 62 |
| Wake up Ayurvedic Doctors ... | 59 |
| Water Hyacinth ... | 131 |

# அட்டவணை.

[வைத்தியகலாநிதி—மூன்றாவது புஸ்தகம்.]

## விசேஷ வியாஸங்கள்.


| வியாஸங்கள். | வியாஸமெழுதியவர்கள் | பக்கம். |
|---|---|---|
| அடிக்கடி ஆஹாரத்தை மாற்றுவதும் ஆரோக்கிய விசேஷமும் ... | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத சிகித்ஸகர் ... | 124 |
| அதிஸாரமும் அதன் சிகித்ஸையும் ... | ஏ. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி. ஸி. எம். ... | 251 |
| ஆதிவைத்திய சாஸ்திரங்களின் சுருக்கமான வரலாறு ... | ஹகிம் எம். கே. ஸயித்முகமத் புலவர், யூனானி வைத்திடர் ... | 176 |
| ஆயுர்வேதத்தின்மேல் சுமத்தப்படும் தோஷங்களும் அவற்றிற்கு ஸமாதானங்களும் ... | மஹாமஹோபாத்தியாய, கவிராஜ் கணநாத ஸேன், எம். ஏ., எல். எம். எஸ். ... | 97 |
| ஆயுர்வேதம் ... | பி. இராமகிருஷ்ண ஐயர், பி. ஏ., ஆயுர்வேத வைத்தியர் ... | 52 |
| ஆயுர்வேத வைத்தியாபிவ்ருத்தி ... | கே. எஸ். துரைஸ்வாமி பண்டிதர், வைத்தியர் ... | 80 |
| ஆரோக்கிய மார்க்கங்கள் ... | எச். இ. பைலர், டி. டி. எஸ். ... | 104 |
| ஆரோக்கியமும் கல்வியும் ... | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத வைத்தியர் ... | 44 |
| இந்திய வைத்திய முறையின் உரிமையும் நோக்கமும் ... | மஹாமஹோபாத்தியாய, கவிராஜ் கணநாத ஸேன், எம். ஏ., எல். எம். எஸ். ... | 250 |
| இயற்கையில் கனிஜவஸ்துக்கள் கலந்த ஜலங்கள் ... | ஏ. எம். மாசிலாமணி முதலியார், எல். எம். அண்ட் எஸ். ... | 1 |
| ஊமத்தையும் அதன் உபயோகமும் ... | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத சிகித்ஸகர் ... | 28 |
| கண்ணீர் விடுதலும் அதன் உபயோகமும் ... | ஆர். இராமசாஸ்த்ரி, ஆயுர்வேத சிகித்ஸகர் ... | 213 |
| காதுவலியும் அதன் சிகித்ஸையும் ... | எஸ். கிருஷ்ணஸ்வாமி வைத்தியர் ... | 10 |
| கிழத்தனம் வராமல் காப்பது ... | வி. குப்புஸ்வாமி நாயுடு, மெடிகல் பிராக்டிஷனர் ... | 174 |
| குழந்தைகளுக்கு வயிற்றிலுண்டாகும் கட்டிகள் ... | யு. எஸ். ஜகதீச ஐயர், பிஸிஷன் அண்ட் ஸர்ஜன் ... | 189 |
| சிறுவர்களின் தேஹாரோக்கியம் ... | ராவ் பஹதூர், டாக்டர் வி. பி. இராமராவ், பி. ஏ., எம். டி. ... | 136 |
| சுதேச வைத்தியமுறைகளும் துரைத்தனத்தாரும் ... | பி. ஆர். சர்மா, வைத்தியர் ... | 211 |
| தவிடும் அதன் ஔஷதோபயோகமான குணங்களும் ... | ஜே. வி. இராமஸ்வாமி நாயுடு, எல். எம். எஸ். ... | 73 |
| தாய்ப்பாலில்லாத குழந்தைகளுக்குப் பசும்பால் உபயோகிக்கும் முறை ... | ஜே. வி. இராமஸ்வாமி நாயுடு, எல். எம். எஸ். ... | 229 |
| தொற்றுவியாதிகளை அடக்கும் முறைகள் ... | இராமநாராயணன், எல். எம். எஸ். ... | 76 |
| நரம்புச்சிலந்தி வியாதி ... | ஆர். நாராயணன், எல். எம். எஸ். ... | 191 |
| நீரழிவு ரோகிகளின் சிகித்ஸையில் வியாயாமம் ... | இராமநாராயணன், எல். எம். எஸ். ... | 123 |
| நெருப்புத்தீக்குவதாலுண்டாகும் மரணங்களைத் தடுப்பதற்கு ஒரு உபயோகமுள்ள முறை ... | இராமநாராயணன், எல். எம். எஸ். ... | 27 |
| பழக்கத்தின் பயன் ... | டி. ஏ. அகஸ்திய சர்மா, பிஸிஷன் அண்ட் ஸர்ஜன் ... | 230, 254 |
| பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்களின் தேஹநிலைமைகளைப் பரிசோதித்தல் ... | ஜே. வி. இராமஸ்வாமி நாயுடு, எல். எம். எஸ். | 169, 209 |
| பாலபோஷணைக்குரிய பள்ளிக்கூடங்களில் ஆரோக்கியமுறை ... | இ. ஆர். சங்கரஐயர், ஆயுர்வேத வைத்தியர் ... | 29 |
| புப்புஸ ஸம்பந்தமான க்ஷயரோக விஞ்ஞானம் ... | வி. கிருஷ்ணரெட்டி, பி. ஏ., எம். பி. ஸி. எம். ... | 49 |
| போர்ச்சேவகர்கள் மதுபானத்தை விலக்கச் செய்யும் ஸபையார் ... | வி. கண்ணன் நம்பியார், ஆயுர்வேத சிகித்ஸகர் ... | 216 |

| | | பக்கம். |
|---|---|---|
| மதுபானம் ஆகிய சத்துரு | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத வைத்தியர் | 172 |
| மதுவிஷத்தினால் மானிடதேஹம் அடையும் கேடு | கே. விஜயரங்கம், ஆயுர்வேத வைத்தியர் | 77 |
| மஸூரிகையும் அம்மைக்குத்துதலின் ஆவச்யகமும் | பி. எதிராஜுலு நாயுடு, எல். எம். எஸ். | 107 |
| மானிட தேஹத்தின் உயர்வும் அதன் பாதுகாப்பும் | ப்ரொபஸர், இராஜகோபாலாசாரியர், எம். ஏ. | 233 |
| மேனாட்டு வைத்தியர்களுக்கு ஓர் வார்த்தை | மஹாமஹோபாத்தியாய, கவிராஜ் கணநாத ஸேன், எம். ஏ., எல், எம். எஸ். | 121 |
| வழக்கமாய் உண்டாகும் பித்தவிகாரம் | கே. ஸுப்ரம்மணியம், ஆயுர்வேத வைத்தியர் | 3 |
| வாழைப்பழ உணவு | ஏ. எம். மாசிலாமணி முதலியார், எல். எம். எஸ். | 25 |
| விடுமுறை நாட்களும் அவற்றின் உபயோகங்களும் | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத வைத்தியர் | 194 |
| வியாதிகளைப் பரீக்ஷித்து நிர்த்தாரணம் செய்வதெப்படி ? | பி. ஜி. கணபதி சாஸ்த்ரி, ஆயுர்தே பூஷண | 57 |
| வெடிகுண்டு பாய்வதாலான புண்கள் | எம். எஸ். ஐயங்கார், ஆயுர்வேத வைத்தியர் | 7 |
| ஜலதோஷம் | கே. ஸுப்ரம்மணிய ஐயர், ஆயுர்வேத வைத்தியர் | 193 |
| ஸ்திரீகள் சுகாதார விஷயங்களைக் கற்பதாலான நன்மைகள் | கே. இராஜகோபாலாசாரியர், பி. ஏ. | 151 |
| ஸ்நாநமும் வைத்தியோபயோகமான அதன் குணங்களும் | எம். மாதவமீனன், ஆயுர்வேத பூஷண | 100 |
| ஹ்ருல்லாஸம் என்னும் வியாதி | ஏ. கேசவசர்மா, ஆயுர்வேத வைத்தியர் | 145 |
| க்ஷயரோகச் சிலந்திக்கு ஆதாரமான கழுத்திலுள்ள கிரந்திகள் | வி. எச். ஹைடன், பி. ஏ., எம். டி. | 149 |


## பத்திராதிபருடைய வியாஸங்கள்.


| | பக்கம். |
|---|---|
| அகிலபாரத ஆயுர்வேத வைத்திய ஸம்மேளனமும் பொருட் காட்சியும் | 17 |
| அபாயங்களில் பிரதம உதவி, 19, 37, 63, 87, 115, 134, 161, 181, 202, 225, 242, 261 | |
| ஆயுர்வேதத்தின் சுருக்கமான வரலாறு | 238 |
| ஆயுர்வேதத்தின் நிகழ்கால நிலைமையும் அதற்கு அவச்யமான சீர்திருத்தமும் | 217 |
| ஆயுர்வேத வைத்தியர்களே கண் விழியுங்கள் | 59 |
| ஆஸ்பத்ரிகளில் வைத்தியம் செய்துகொள்ளுதல் | 112 |
| இடுப்புவலி | 36 |
| இந்திய ஔஷதச்சரக்குகளை இப்பொழுதாவது உபயோகிப்பது உத்தமம் | 82 |
| இராணுவ ஊழியமும் சரீரவன்மையும் | 17 |
| காசமென்னும் கண்வியாதியின் சிகித்ஸையைப்பற்றிய எச்சரிக்கை | 11 |
| குன்றிட இருதயம் | 257 |
| சுகாதார வினாவிடை | 220 |
| சுதேச வைத்தியமுறைகளின் விஷயத்தில் ஸர். பி. ஹூகிஸ்ஸின் அபிப்பிராயம் | 62 |
| சென்னையில் விஷமஜ்வரம் | 133 |
| சென்னை வைத்திய ஸங்கம் | 85 |
| திருப்பூரில் ஒரு புதிய ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை | 16 |
| தேச பாஷைகளில் வைத்தியம் கற்பித்தல் | 178 |
| நமது தேசத்துப் பிரஜைகளின் சுகவாழ்க்கை | 198 |
| நமது பத்திரிகையைப் படிப்பவருக்கு ஒரு வேண்டுகோள் | 260 |
| நாம் இழந்துவிட்ட ஆயுர்வேத நூல்கள் | 157 |
| நீரிழிவு ரோகமும் அதன் சிகித்ஸையும் | 31 |
| பாலும் அதன் கலப்பும் | 201 |
| பில்வமும் அதன் ஔஷதத் தன்மைகளும் | 127 |
| பேய்த்தாமரை யென்னும் ஒரு கொடிய நீர்ப்பூண்டு | 131 |
| மதுவைப்பற்றிய குறிப்புகள் | 33 |
| மருந்துண்ணும் மதியீனம் | 132 |
| வெயில் விசேஷ குணந்தரக்கூடியதாம் ? | 160 |
| வைத்தியப்பதிவு சட்டம் | 134 |
| ஜ்வரம் ஒரு வியாதியல்ல | 180 |
| ஸந்நிபாத ஜ்வரத்தைத் தடுக்கும் முறை | 240 |

## ஸந்தேஹ வினாவிடைகள்.


| | பக்கம். |
|---|---|
| அடிக்கடி ஜலம் இறங்குதல் ... | 227 |
| அதிவித்திரையும் திமிரும் ... | 22 |
| ஆசார சரபாதி சூர்ணத்தை உட்கொள்ளும் வகை. | 93 |
| ஆமவாதம் ... | 267 |
| இருதய வியாதி ... | 246 |
| எண்ணெயும் நேத்திரா ரோக்கியமும் ... | 142 |
| ஒருவித தலைநோய் ... | 22 |
| கழுத்து வலி | 187, 227 |
| களகண்டம் என்னும் கிரந்தி ... | 165 |
| கஸ்தூரி ... | 118 |
| காக்கை வலி ... | 165 |
| காது வியாதிகளுக்கான புஸ்தகம் ... | 165 |
| கிரோவின் எண்ணெயும் ஜயதூண் எண்ணெயும் | 44 |
| குங்கிலியத் தைலம் ... | 119 |
| குழந்தைகளுக்கு ஏற்ற உணவு ... | 207 |
| கொறுக்கு வலி அல்லது இசிவு ... | 143 |
| சார்ங்கதர ஸம்ஹிதையிலுள்ள சில ஔஷதங்கள் | 143 |
| சில அபூர்வ ஔஷதிகள் ... | 45 |
| சில சரக்குகளை உபயோகிக்கும் வகை ... | 186 |
| சிறு குழந்தைகளுக்கு உணவு ... | 44 |
| செவி சிரஸ்ஸுகளில் இரைத்தல் ... | 207 |
| தத்ரு என்னும் படை ... | 70 |
| தாதகியும் வாருணீ மூலமும் ... | 94 |
| தார்ப்பல ஹ்ருதயமும் ட்ராம்வண்டிப் பிரயாணமும் ... | 207 |
| நாசி-செவிகளைப் பற்றிய நோய் ... | 23 |
| நாசி-செவிகளைப்பற்றிய வினாவுக்கு விடை ... | 44 |
| நாடாப் பூச்சிகளுக்கு சிகிச்சை ... | 40 |
| நீடித்த வயிற்று வலி ... | 246 |
| நீரடிமுத் தெண்ணெய் ... | 94 |
| பலம் பெறுவதற்கேற்ற உணவு ... | 143 |
| பீஜவீக்கத்திற்கு சிகிச்சை ... | 246 |
| புகையிலைப் பழக்கம் ... | 70 |
| மதுமேஹம் ... | 186 |
| வாய்ப் புண் ... | 45 |
| விடங்காரிஷ்டம் ... | 227 |
| விஹ்மாத குக்குலு ... | 266 |


---

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.


| | பக்கம். |
|---|---|
| அதிவிடயம் ... | 117 |
| அபஸ்மாரத்திற்கு நவீன சிகித்சை ... | 93 |
| அபினிச்சத்தின் அபூர்வகுணம் ... | 43 |
| அமிதமான மாதவிடாயில் கஞ்ஜா ... | 141 |
| அயோடைனும் ப்ளேகும் ... | 155 |
| அலரி ... | 21 |
| அழிஞ்சில் ... | 68 |
| அஜீர்ணபேதிக்குக் கைகண்ட ஔஷதம் ... | 186 |
| ஆமணக்கெண்ணெயின் வாஸனையை மறைக்கும் வகை ... | 245 |
| இந்துப்பும் படிக்காரமும் ... | 117 |
| உணி யென்னும் பருக்களுக்கு மருந்து ... | 167 |
| கடற்பாலை ... | 92 |
| கண்டமாலையில் வெந்நீர் சிறந்த ஔஷதம் ... | 206 |
| கற்பூரத் தைலம் ... | 245 |
| காடி ... | 41 |
| காட்டாமணக்கு ... | 41 |
| கால்தீரியா-ச்வாஸகாஸத்திற்கு ... | 186 |
| காவட்டம் புல் ... | 91 |
| காளான் ... | 266 |
| காவீஸாதி தைலம் ... | 226 |
| கிச்சிலி ... | 140 |
| குரல்வளை அழற்சியில் கிரோவினெண்ணெய். | 43 |
| சதகுப்பி ... | 244 |
| சரக்கொன்றைப்புளி ... | 118 |
| சர்க்கரை விக்கலைப் போக்கும் ... | 164 |
| சஸ்திர சிகித்சையில் ஆமணக்கெண்ணெய் ... | 69 |
| சஸ்திர சிகித்சையில் வெள்ளிரேக்கின் உபயோகம் ... | 92 |
| சாகபக்ஷிணிகளுக்கு ஒரு நல்ல செய்தி ... | 141 |
| சாமந்திப்பூத் தைலம் ... | 69 |
| சிலாஜது ... | 265 |
| சிறுபூலை ... | 205 |
| சீமை மிளகாயும் நீரிழிவு ரோகமும் ... | 206 |
| சுக்ரஸ்கலனத்தைத் தடுக்கும் ஔஷதம் ... | 206 |
| சூரியகாந்தி ... | 21 |
| சேனைக் கிழங்கு ... | 226 |
| சோம்பு ... | 244 |
| டர்பண்டைன் ... | 69 |
| தாம்ரம் ... | 69 |
| தேன் நீரிழிவில் குணந்தரக்கூடியது ... | 206 |
| நாகதும்பீ ... | 185 |
| காட்டு அக்ரோட் ... | 68 |
| நாயுருவி ... | 42 |
| நாவல் | 43 |
| பஞ்சவக்த்ர ரஸமாத்திரை ... | 206 |
| பாரிஜாதம் ... | 92 |
| பெருங்காயத்தின் விசேஷம் ... | 164 |
| பெருந்தும்பை ... | 41 |
| பேரரத்தை ... | 68 |
| பொடாஸியம் பெர்மாங்கனேட் ... | 245 |
| மஞ்சட் கடம்பு ... | 205 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| மஞ்சள் பாவட்டை ... | 20 | விலாரியின் விசேஷம் ... | 140 |
| மஞ்சாடி ... | 117 | விளிகர் என்னும் காடி ... | 245 |
| மதுமேஹத்தில் சுண்ணும்பு ... | 200 | வெள்ளியும் பொட்டிலுப்பும் ... | 226 |
| மலபந்தத்தில் ஆரஞ்ஜ் என்னும் கிச்சிலிப்பழம். | 266 | வெள்ளுள்ளி இரங்களைப் போக்கும் ... | 41 |
| யானைக் கற்றுழை ... | 226 | வேளை ... | 21 |
| யூக்லிப்டஸ் எண்ணெய் ... | 68 | ஜம்பூ ... | 43 |
| ரணங்களை ஆற்ற ஸமுத்திர ஜலம் ... | 42 | ஸந்நிபாத ஜ்வரத்தில் கந்தகம் ... | 43 |
| வசம்பு ... | 163 | ஸால்வார்ஸன் என்பதற்குப் பதிலாக ஒரு நூதன ஔஷதம் ... | 245 |
| வயிற்றுக் கிருமிகளுக்கு டர்பண்டைன் ... | 164 | ஸ்வர்ணவங்கம் ... | 42 |
| வாஸனைப் புல் ... | 20 | | |


## பலவகைக் குறிப்புகள்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அக்னிவ்ரண சிகித்ஸை ... | 208 | நமது கொடிய சத்ரு ... | 168 |
| அஷ்டாங்க ஹ்ருதயம் ... | 268 | நேத்திரம் ஓர் ஆச்சரியகரமான யந்திரம் ... | 48 |
| ஆஸிட்ஸ் என்னும் காரங்களாலுண்டாகும் அபாயங்கள் ... | 95 | பசளைக்கீரை அழகைக்கொடுக்கும் ... | 24 |
| ஆஹாரமும் நீண்டகால வாழ்வும் ... | 144 | பருக்களுக்கு எளிதான ஔஷதம் ... | 228 |
| இரண்டு வைத்தியசாஸ்திர நிபுணர்களின் மரணம் ... | 268 | பல் முளைத்தல் ... | 47 |
| இராஜப்பிளவை உண்டாவதெப்படி ... | 197 | பற்களில் இணைத்து எழுதும் கருவி ... | 228 |
| உப்பும் கொய்யாவும் சர்க்கரையும் ... | 96 | பாதரஸமும் கர்ப்பிணியும் ... | 168 |
| எவ்வித ஸ்த்ரீயை மனைவியாகக் கொள்ளலாம். | 95 | பால் ... | 48 |
| ஒடிந்த முகவாய்க்கட்டையெலும்பைப் புதுப்பித்தல் ... | 167 | புட்டாளம்மை ... | 268 |
| ஒரு துப்பாக்கி ரவையுடன் கூடிய இருதயம்... | 46 | புல் மனிதருக்கும் உணவாம் ... | 46 |
| ஒரு புத்திசாலியான மாணுக்கன் ... | 68 | புஸ்தக வரவு, | 46, 71, 95, 144, 166 |
| ஒருவர் பிறந்தநாள் கிழமைகளைக் கண்டறியும் வகை ... | 248 | பூனா ஆயுர்வேத வைத்தியசாலை ... | 23 |
| ஔஷதச் சரக்குகளின் பஞ்சம் ... | 191 | மலேரியாவுக்கு ஏற்றவயது ... | 168 |
| கடுகு ஞாபகசக்தியை விருத்திசெய்யும் ... | 24 | மதுபாணிகளைப்பற்றிய ஒரு வினவிடை ... | 166 |
| கர்ப்பகாலத்தில் ஜயதாண் எண்ணெய் ... | 188 | மனத்தொல்லையும் மகிழ்ச்சியும் ... | 48 |
| களகண்டத்திற்கு சிகித்ஸை ... | 228 | மனிதரின் ஜீவிதகால அளவு ... | 193 |
| கற்பூரத்திற்கு விஷத்தன்மை ... | 72 | மாம்ஸ பேசிகளைப்பற்றிய ஆமவாத சிகித்ஸை. | 188 |
| காடிக்காரமும் சிரங்கும் ... | 228 | முகப்பருக்களுக்கு சிகித்ஸை .. | 268 |
| காதுக் குரும்பியைப் போக்குதல் ... | 47 | மூட்டுப்பூச்சிகளையும் பேன்களையும் போக்க சுலபமான உபாயம் .. | 47 |
| குழந்தைகளின் இறைப்பைக் கோளாறில் வராட பஸ்மம் ... | 96 | மூர்ச்சையில் கவனிக்கத்தகுந்த சிகித்ஸை ... | 188 |
| குழந்தைகளுக்கு சில வியாதிகளின் முக்கியமான குறிகள் ... | 247 | யுத்தமுனைக்கு ஒரு ஹகீம் ... | 168 |
| குஷ்டரோகம் ... | 120 | யூனஸ் ப்ருட்ஸால்டினல் ஏற்பட்ட செல்வம் | 167 |
| க்ருத்ரஸீ என்னும் வாதரோகம் ... | 72 | ரோகபரீக்ஷைக்குப் புலன்களே மேலானகருவிகள் | 247 |
| சார்ங்கதர ஸம்ஹிதை ... | 95 | வாழைச்சாற்றால் ஸர்ப்பந்தீண்டியவன் சுகமடைந்தான் ... | 228 |
| சிரக்கபாலத்தில் சிறந்த சஸ்திர சிகித்ஸை ... | 71 | வெங்கடரமண வைத்தியசாலை ... | 208 |
| சென்னை வைத்திய ஸங்கமும் ஆயுர்வேதமும் | 120 | வெயிலுக்குள்ள வியாதிநிவாரண சக்தி ... | 228 |
| சோர்வு அல்லது மூர்ச்சைக்கு சிகித்ஸை ... | 167 | வைத்தியசாஸ்திர ஆராய்ச்சிக்கு ஐம்பதினாயிரம் டாலர்கள் ... | 247 |
| டாக்டர்கள் சரிதாய் விட்டனர் ... | 24 | வைத்தியம்படிக்க விசேஷ ஏற்பாடு ... | 188 |
| டெல்லியில் ஓர் ஆயுர்வேத டிப்பிகாலேஜ் ... | 119 | வௌவால் அல்லது தூரிஞ்சில் கொசுக்களை அழிக்கும் ... | 47 |
| தண்ணீர் க்ஷயரோகிகளுக்கு உத்த மௌஷதம். | 72 | ஜப்பானியர் அம்மைக்குத்தும் முறை ... | 228 |
| தேச பாஷைகளில் வைத்தியம் கற்பித்தல் ... | 120 | ஸந்நிபாதஜ்வரத்தை ஸ்வஸ்த்தம் செய்ய ஒரு நூதன முறை ... | 24 |
| தொண்டையின் கிரந்தியில் ஒரு கிருமி ... | 187 | க்ஷயரோகத்தில் வெள்ளைப் பூண்டு ... | 23 |
| தொழிலில் நிபுணரான ஒரு டாக்டர் ... | 48 | க்ஷயரோகத்திற்கு முக்கிய காரணம் ... | 144 |
| | | 93-வது வயதில் யௌவனம் ... | 208 |

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar
*Ayurveda Bhushana*

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. | ப்ரமாதீச ௵ ஆவணி ௴—SEPTEMBER 1913 | ஸஞ்சிகை 1. No. 1.

## OUR SELVES.

### எமது ஆரம்ப விஷயம்.

**நோயற்றவாழ்வு.**

எவ்வளவு தூரம் நாம் நிதானித்து யோசித்தபோதிலும், ஒவ்வொரு விஷயமும் விசாரத்திற்கு வந்து தீர்க்கிக்கப்படும்பொழுது அல்லது அவ்விஷயமான காரியத்தை நிறைவேற்றும்பொழுது அந்தந்த விஷயமே வெகு முக்கியமானதென்று ஊக்கத்துடன் நிர்ணயிக்க முயன்றாலும், அவ்வவ் விஷயமும் தற்காலத்தில் அவ்வாறு கூறக்கூடியதேயல்லாமல் 'நோயற்ற வாழ்வு' என்னும் விஷயத்தைப்போல் மிகவும் சிலாக்யமானதென்று என்றைக்கும் அனைவராலும் ஒரே மனதாய் அங்கீகரிக்கக் கூடிய அவ்வளவு சிறந்த விஷயம் மற்றொன்றில்லை. நோயற்று ஸுகமாய் வாழ்வதற்காகவே உலகத்தில் மனிதர் மட்டுமேயல்ல—மற்றும் மிருக பக்ஷி முதலிய எல்லா பிராணிகளும் பற்பல முயற்சிகளைச் செய்து வருகின்றன. நமது ஆரியர்கள் ஆதிகாலந்தொட்டு ஏற்படுத்தியிருக்கும் அஹ்நிகக்ருத்யம் அதாவது தினப்படி காலையிலிருந்து இரவில் படுக்கும் வரையில் கடமையாகச் செலுத்த வேண்டுமென்று விதித்திருக்கும் ஆசாரம் ஆஹாரவிதி முதலியவைகளிலும், ஐரோப்பியர் முதலியவரது முறைப்படி தினந்தோறும் நடந்து வரக்கூடிய காரியங்களிலும் முக்காலே மூவீசமும் 'நோயற்றவாழ்வு' என்னும் கொள்கையையே ஆதாரமாகக் கொண்டவையென்று கூறுவதற்குத் தடையில்லை. இவ்வுலக இன்பங்களைத் துரும்பாகக் கருதிய யோகிகளும் முனிவர்களுங்கூட நோயற்ற நிலைமையுடன் பல நூற்றாண்டுகள் நீடித்து ஜீவித்திருப்பதற்குப் பற்பல விதங்களில் முயன்று அவ்விதமே நீண்டகாலம் அவர்கள் ஜீவித்திருந்ததாகவும் பிரமாணங்களுரைக்கும் நமது பிராசீன கிரந்தங்களே இதற்குச் சான்றாம்.

**வேதமுண்டான காலத்தில் வைத்திய நிலைமை.**

ஆகையால் இவ்விந்தியாவில், நமது புத்திக்கு எட்டாத அவ்வளவு பண்டைக்கால முதல்-அதாவது வேதங்களுண்டான நாள் முதலாக—நோயற்று வாழ்வதற்கு வேண்டிய உபாயங்கள் அனேகம் இருந்து வந்ததாகவும், இருஷிகளுடைய பெரு முயற்சிகளால் அவ்வுபாயங்கள் வெளிப்படையாகத் தேசமெங்கும் கையாளப்பட்டதுடன், வைத்திய ஸ்ம்பந்தமான ஸூத்ரங்களும், ஸம்ஹிதைகளென்

னும் கிரந்தங்களும் ஜனங்களின் நன்மையின் பொருட்டு அம்முனிவர்களால் இயற்றப்பட்டு ஜனங்களுக்கு ஆரோக்ய வழிகளும் அனேகம் போதிக்கப் பட்டனவென்று தெரியவருகிறது. ச்யவந ருஷிக்குக் கிழத்தன்மை வந்தபோது அனைவரும் அவரைக் கைவிட்டபின், அச்விநீதேவதைகள் வந்து அவருக்கு மறுபடியும் யௌவனதசையை உண்டாக்கியதாகக் கூறப்படுகிறது.* மற்ற நாடுகளில் மானிடர் மாடுகளினும் கேடாகக் காடுகளில் நடமாடிக்கொண்டிருந்த பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னமே பரதகண்டத்தில் ப்ராசீன ஆர்யர்கள் இதர கல்விகளைப்போலவே சரீரத்திற்குண்டாகும் கோளாறுகளைப் போக்குவதற்கும், அவற்றை வரவிடாமல் தடுப்பதற்கும் அவசியமாயுள்ள ஆசாராதிகளைப் பின்பற்றியதுடன் பலவிதமான வைத்தியமுறைகளையும் அறிந்திருந்து அவற்றில் வல்லவராயுள்ளவர் வைத்தியர்களாகவும் அழைக்கப்பட்டனர்.† மேலும் அவர்கள் வைத்தியம் செய்வதிலும், அத்தொழிலுக்கு வேண்டிய வெவ்வேறு மூலிகை முதலியவற்றின் குணங்களை அறிவதிலும் ஸமர்த்தர்களாயிருந்ததாக வேதங்களில் அனேக பிரமாணங்கள் உண்டு.‡ ஸோமலதை முதலானதைக்கொண்டு ஔஷதங்களாக உபயோகமாகக்கூடிய அனேக மத்யம் முதலியதைச் செய்துவந்ததாகவும், அவைகள் கெடாமலிருப்பதற்குத் தகுந்த உபாயங்களை அறிந்திருந்ததாகவும், மற்றும் இதைப் பற்றிய பலவிஷயங்களும் ஐதரேயப்ராஹ்மணம் முதலான விடங்களில் காணப்படுகின்றன.* மேலும் முற்காலத்திய ஆர்யர்கள் சரீரதத்துவங்களைப் பரிசோதிப்ப்திலும் ஊக்கமுள்ளவராக இருந்து வந்ததுடன், அவ்விதம் சரீரதத்துவம் முதலியவற்றில் நல்ல பயிற்சி இருந்ததாலேயே, சஸ்திரசிகித்ஸையைச் செய்வதற்கும், சரீரத்திலடங்கிய அந்தந்த அவயவங்களுக்கு இயல்பான அல்லது இயல்பாகாத காரியங்களைத் தூண்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு ஏற்ற குணங்கள் மூலிகை முதலியவற்றில் உண்டென்று அறிந்து, பதார்த்தகுணங்களை விளக்குவதற்கும் திறமையுள்ளவர்களாயிருந்தனர்.‡ அச்விநீதேவதைகளைப்பற்றிய மந்திரங்களையும் சரித்திரங்களையும் படித்தால், யாகத்தின் அதிஷ்டான தேவதையினுடைய துண்டாக அறுபட்ட சிரஸ்ஸை அவர்கள் மறுபடியும் சேர்த்து வைத்துக் கூடும்படி செய்து,

* "யுவம் ச்யவாந மச்விநா ஜரந்தம் புனர் யுவாநம் சக்ரதுச் சசீபி:" ருக்வேதம். 1, 117, 18. ம் 5. 74, 5. ம் பார்க்க.

† ருக் ஸம்ஹிதையில் (10-97, 6) "யத்ரௌஷதிஸ் ஸமக்மத ராஜாநஸ் ஸமிதாவிவ, விப்ரஸ் ஸ உச்யதே பிஷக் ..." இந்த ப்ரகரணத்திலுள்ள எல்லா ருக்குகளும் பெரும்பாலும் வைத்திய விஷயமானவைகளே.

‡ அதர்வணபிஷக் என்னும் வைத்தியர் ஔஷதங்களுக்கு உபயோகமான மூலிகைகளை ஆராய்ச்சி செய்ததாக 5. 10. 97 ருக்வேதம் கூறுகிறது. இந்த இடத்திலுள்ள ருக்குகளில் அனேகம் ஒஷதிகளின் பிரிவுகளையும் இலக்ஷணங்களையும் கூறுகின்றன.

* "அத ஹைந தம் சுநச்சேபோஞ்ஜஸஸ் ஸவம் ததர்ச தமேதாபிச் சதஸ்ருபிரபிஸ¬ஷாவ யச் சித்தி ஸ்வம் க்ருஹே க்ருஹ இதி." ஐதரேயப்ரா. 7. 17. பார்க்க. ஸோமலதையைப் போலவே உதும்பரம் (அத்தி), அச்வத்தம் (அரசு), ப்லக்ஷம் (கல்லாலை) முதலிய வேறு ஒஷதிகளும் உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. ஐத—ப்ரா. 7. 32ம், 7. 34ம், பார்க்க.

‡ மஸ்திஷ்க, கீகஸ, க்லோம (மூளை, எலும்புக்கோவை, பாங்க்ரியஸ் என்னும் ஒருவகை ஈரல்) இவற்றைப்பற்றி ஐத - ப்ரா. 1. 2. ம்; 7. 1. ம்; ஜராயு, உல்பம் (கருப்பையைச்சார்ந்த சவ்வு, சிசுவைக் கவர்ந்துள்ள ஒரு சர்மம்) என்பவற்றைப்பற்றி 2. 12. ம்; ஸேவரீ 3. 37. ம்; காண்த,

அத்தேவதையை உயிர்ப்பித்ததாகவும், இக்காலத்தில் மேனாட்டார் செய்யும் வித்யாகக் கால் ஒடிந்தவனுக்கு அக்காலை எடுத்தெறிந்துவிட்டு இரும்பால் செய்த ஒருவகையான பொய்க் காலை (Artificial leg) ஏற்படுத்தியதாகவும் தெரியவருகிறது.* சரீரதத்துவ விஷயமாய் ஆர்யர்களின் அறிவு அக்காலத்தில் (in the Vedic Period) எவ்விதமாயிருந்ததென்பது, ஸ்த்ரீகளின் கருப்பை முதலிய உள் அவயவங்களையும், கர்ப்பத்தில் சிசு, இருக்கும் நிலைமையையும், சிசு வெளிவரும் மாதிரிகளையும்பற்றி ஐதரேய ப்ராஹ்மணம் முதலியது கூறுவதை விசாரித்தறிந்தால் நன்கு விளங்கும்.†

இருஷிகளின் காலத்தில் வைத்திய நிலைமை.

இவ்வாறு முதலில் (Vedic period) நல்லறிவைப் புகட்டக் கூடியதாயிருந்த இவ் வைத்தியசாஸ்திர முறைகளை பிறகு இருஷிகள் ஸம்ஹிதை அல்லது சில கிரந்தங்களாகவும் இயற்ற முயன்றனர். இவர்கள் அப்படி எழுதிய வைத்திய நூல்களுக்கு ருக்வேதம் அதர்வணவேதம் முதலியவற்றிலுள்ள மேற்கூறியவைகளைப்போன்ற அளவற்ற பிரமாணங்களையும், ருக்வேதத்திற்கு உபவேதமாகக் கூறப்படுவதும் பிரம்மாவினால் வெளியிடப் பெற்றதுமான ஆயுர்வேதமென்னும் தனியான தந்த்ரத்தையும், மற்றும் தமது பிரத்யக்ஷானுபவங்களையும் ஆதாரமாகக் கொண்டனர்.

இருஷிகளின் வைத்தியாப்யாஸமும் ஆராய்ச்சிகளும்.

பலவகையிலும் மேலான அறிவுள்ளவரென்று அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட இம்முனிவர்கள் கூட ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தைத் தாமே ஒருவாறு நூலாக இயற்றாமல், குருமார்களின் முன்னிலையில் கற்றறிந்து, அனேகவிதமாக விசாரம் செய்து, பிறகு உலகத்தில் அப்போதைக்கப்போதுண்டாகும் பற்பல வியாதிகளின் தத்துவங்களையும் அவற்றிற்கு ஏற்ற சிகித்ஸாமுறைகளையும் ஸந்தேஹமறத் தெரிந்துகொள்ள விரும்பி, வைத்திய சாஸ்திரவல்லோரான அனேக இருஷிகள் ஹிமாலயம் பஞ்ஜாப் முதலான விடங்களில் ஸபை கூடி, அவரவரது அபிப்பிராயங்களையும் வெளியிட்டு, இறுதியில் தாம் விசாரிக்க முயன்ற விஷயத்தை அந்த ஸபைகளில் ஒரு விதமாகத் தீர்மானம் செய்துகொண்டு, அதன் பிறகு உலகத்தில் அவ்விஷயத்தை அனுபவத்திற்குக் கொண்டுவருவது வழக்கமாயிருந்தது. இதற்கு ஸுச்ருதஸம்ஹிதையின் ஆரம்பத்தில் காசிராஜாவான திவோதாஸனென்று வேறு பெயருள்ள தன்வந்தரியை அத்யக்ஷராக ஏற்படுத்திக்கொண்டு ஔபதேநவர், வைதரணர், ஔரப்ரர், பௌஷ்கலாவதர், கரவீர்யர், கோபுரரக்ஷிதர், ஸுச்ருதர் முதலியவர்கள் தன்வந்தரி உபதேசிக்கும் வைத்திய விஷயமான உபந்யாஸங்களைக் கருத்துடன் சிரவணம் செய்ததையும், சரகஸம்ஹிதையில் வாதகலாகலீயமென்னும் அத்தியாயத்தில் வாயு முதலியவற்றின் தத்துவங்களைப் பற்றி-க்ருச ஸாங்க்ருத்யாயனர், குமாரசிரஸ் பரத்வாஜர், காங்க்ஷாயன பாஹ்லீகபிஷக், ப்டிச தாமார்க்கவர், வாயொர்விதவசஸ் மரீசி இந்த மஹார்ஷிகள் கூடி ஒருவருக்கொருவர் ஆலோசித்து ஆராய்ச்சி செய்ததையும், அதி

* தைத்திரீய ஸம்ஹிதையில் 6. 4. 9. 1; ஐதரேயத்தில் 1. 18; ஸுச்ருதஸம்ஹிதை ஸூத்ரஸ்த்தானத்தின் முதல் அத்தியாயமும் காண்க.

† தஸ்மாத் பராஞ்சோ கர்ப்பா தியந்தே பராஞ்சஸ் ஸம்பவந்தி ... தஸ்மாந் மத்யே கர்ப்பா த்ருதா:,, ஐத. ப்ரா. 3. 19.

லேயே மஹாசதுஷ்பாதாத்தியாயத்தில் ஆத்ரேயர், மைத்ரேயர் முதலானவர் சேர்ந்து பிணிகளைப்பற்றி புரியும் விசாரங்களையும் திருஷ்டாந்தமாகக் கூறலாம். இருஷிகளுடைய காலத்தில்தான் பரதகண்டத்தில் வைத்திய சாஸ்திரமானது சாரீரசாஸ்திரம் (Physiology and Anatomy), ரோக நிதாநம் (Pathology), சிகித்ஸா தந்த்ரம் (Therapeutics and medicine), திரவ்யகுணபாடம் (Materia Medica), சஸ்திரசிகித்ஸை (Surgery) இவைமுதலிய அனேக வகையான பிரிவுகளாகப் பகுக்கப்பட்டும், எந்தெந்த பகுதியில் எவரெவருக்கு யோக்யதை விசேஷமாயுண்டோ அவரவரே அததற்கு அதிகாரியாக நிர்ணயிக்கப்பட்டும் சில சிறந்த சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. "நிதாநே மாதவ: ச்ரேஷ்டஸ் ஸூத்ரஸ்த்தாநே து வாக்பட:, சாரீரே ஸுச்ருத: ப்ரோக்தச் சரகஸ்து சிகித்ஸிதே"— மாதவகரன் என்பவன் ரோகநிதாநத்திலும், வாக்படாசார்யர் ஸூத்ரஸ்த்தாநத்திலும்*, ஸுச்ருதர் சரீரதத்துவ-சஸ்திர சிகித்ஸைகளிலும், சரகர் சிகித்ஸையிலும் சிறந்தவராவர் என்று கூறப்படும் பொதுவான வசனமும், சரகஸம்ஹிதையில் நேத்திரசிகித்ஸா ப்ரகரணத்தில் "பராதிகாரே து ந விஸ்தரோக்தி:" என்று, சாலாக்யதந்த்ர மென்னும் நேத்திரரோக சிகித்ஸையில் நிபுணரென்று அதிகாரம் பெற்றவர் சொல்லவேண்டிய விஷயத்தில் தான் அதிகமாய் எதும் சொல்லுவதற்கில்லை யென்று அக்னிவேசர் மொழியும் விஷயமும் இங்கு உதாரணமாக எடுத்துரைக்கக் கூடியன. அன்றியும், இங்கு சிகித்ஸை செய்யவேண்டிய வகைகளானவை ரோகிகளின் சரீர நிலைமை, ரோகத்தின் ஸ்வரூபம், மூலிகைமுதலியவற்றின் தன்மை, காலபேதம், தேசபேதம், அவனவனுக்கு இயல்பான வழக்கம் இவை முதலியவற்றிற்குத் தகுந்தவாறு யுக்தியாகவும், சாஸ்த்ரீயமாகவும், வெகு எளிதில் உபயோகிக்கக்கூடிய உபாயங்களை உபதேசிப்பனவாகவும், நற்பயன் விளைவிக்கத்தகுந்தவையாகவும் இருக்கின்றன. அவை (1) ஸ்நேஹவிதி (தைலம் முதலியதையுபயோகித்தல்), (2) ஸ்வேதவிதி (வேது பிடித்தல்முதலியது), (3) வமநம், (4) விரேசநம், (5) நிரூஹவஸ்தி, (6) அநுவாஸநவஸ்தி (இவ்விரு வஸ்திகளும் ஆஸநத்வாரத்தின் மூலமாய் ஔஷதங்களைக் குடலிற் செலுத்தி மலம் முதலியவற்றைக் கழுவும் விதிகளைக் குறிக்கும்), (7) உத்தரவஸ்தி (குஹ்யத்தில் மருந்தைச் செலுத்தி சிகித்ஸை செய்யும்விதம்), (8) தூமபாநம், (9) நஸ்யகர்மம், (10) அஞ்ஜநம், (11) கண்டூஷம் (வாய்க்கொப்புளிக்கும் மருந்து) (12) மூர்த்த தைலம் (சிரஸ்ஸில் ஒருவிதமாக சில ஔஷதங்களைக் கொண்டு பாத்தி கட்டி தைலம் முதலியதிடுதல்) முதலானவையாம். மேலும் நமது முன்னோர்களான இருஷிகள் கண்டு பிடித்திருக்கும் பிணிகளும் பல்லாயிரக்கணக்கானவை.

**தந்த்ரங்களென்னும் வைத்திய நூல்கள்.**

இதன்பிறகு, தந்த்ரங்கள் எனப்படும் வேறு வகையான சில வைத்தியநூல்கள் ஏற்படத் தொடங்கின. பெரும்பாலும் இவ்வித தந்த்ர கிரந்தங்கள் புத்தருடைய காலத்திற்குப் பின் உண்டானதாகத் தோற்றுகின்றன. இந்த ஸமயத்தில் வாக்படாசார்யர் வெகு சிறந்த வைத்தியநூல்களை எழுதி பரதகண்டத்து ஜனங்களுடைய நன்றிக்குப் பாத்திரமானார். இவர் எழுதியிருக்கும்

* ஒரு கிரந்தத்தில் சொல்லப்போகிற எல்லா விஷயங்களையும் வெகு சுருக்கமாகச் சேர்த்து எழுதப்பட்ட பாகம் 'ஸூத்ரஸ்த்தாநம்' எனப் படும்

'அஷ்டாங்கஸங்க்ரஹம்', 'அஷ்டாங்க ஹ்ருதயம்' இரண்டும் சரீரதத்துவ விசாரணையிலும், வைத்யவிஷயங்களை வெகு ஸங்கிரஹமாக மனதிற் பதியும்படி எடுத்துரைக்கும் வகையிலும் மிகவும் நாகரீகத்திற் சிறந்தவரென்று எண்ணப்படும் மேனாட்டாருடைய இக்காலத்திய வைத்திய முறைகளுக்குச் சற்றேறக் குறைய ஸமானமாயிருக்கக்கூடுமெனத் தோற்றுமாறு சில ஸந்தர்ப்பங்களில் அழகாய் அமைந்திருக்கின்றன. இக்காலமுதல் வைத்தியர்கள் இரஸவர்க்கம் உலோஹவர்க்கம் முதலியவற்றையும் ஔஷதங்களிலுபயோகிக்க முயன்றதானது, அவ்வித பதார்த்தங்களின் தத்துவங்களையும், அவை குடலிற் சென்று ஜீர்ணமாகக் கூடுமாறு அவற்றைப பக்குவம் செய்வதற்கு வேண்டிய உபாயங்களையும், அவை சரீரத்திற் சென்று ஒவ்வொரு தாதுவிலும் சேர்ந்து செய்யக்கூடிய வேலைகளையும் அப்பொழுதுதான் நன்றாகக் கற்றறியத் தொடங்கினரெனத் தெரியவருகிறது.

**சுதேச வைத்தியங்களின் தற்கால நிலைமை.**

இவ்விதமெல்லாம் நமது ஆயுர்வேத சாஸ்திரம் நாளுக்கு நாள் அபிவிருத்திக்கு வந்துகொண்டிருந்தும், அசோகசக்கிரவர்த்தி முதலானவர்களுடைய காலத்தில் அனேக தர்மவைத்தியசாலை முதலியவை ஏற்பட்டு அவற்றின் மூலமாய் இச்சாஸ்திரம் பூமியில் நன்கு வேரூன்றி நிலைத்திருந்தும் பிறகு காலக்ரமத்தில் இராஜாங்கத்தாரின் ஆதரவையிழந்து, நன்கு படித்தறிந்து விசேஷமாய் விசாரம் செய்து தத்துவார்த்தங்களைக் கண்டறியக்கூடிய வைத்தியர்களின் அவலம்பத்தைத் துறந்து, சரீர தத்துவங்களிலும் பதார்த்த பரிசிலனைகளிலும் வியாதிவிபாகங்களிலும் விருத்தியடைந்து செழித்த நிலைமையிலிருப்பதற்கு வகையற்றதாய் வீணில் வீழ்ந்துவிட்டது. தற்காலத்தில் இவ்வைத்திய முறை இருக்கும் நிலைமையை நோக்குங்கால், இவ்விதமே ஆதரிப்பாரின்றி உபேக்ஷிக்கப்பட்டுவருமானால், இன்னும் சிறிது வருடங்களிலேயே நாம் காதால் கேட்கவுங்கூடாத வெகு துர்த்தசையையடைய நேரிடுமென்றும், அவ்விதமானால் நமது மூத்தோர் இயற்றிய அரிய வைத்திய சாஸ்திரநூல்களும் வீணாக அழிந்துவிடுமேயென்றும், அதனால் பெரியோர் நமக்குச் செய்த நன்மையை மறந்து அவர்களிடம் நாம் நன்றியற்றவரென்பதைக் காட்டிக்கொள்ளவேண்டுமே யென்றும் ஒரு விதத்தில் அஞ்சுகிறோம். மற்றொரு விதத்தில், நமது தேசத்தில், விசேஷமாகத் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் வைத்தியர்களில் பெரும்பான்மையோர் உலகத்தில் ஆங்காங்கு வைத்தியசாஸ்திர ஸம்பந்தமாக எவ்வெவ்விதமான காரியங்கள் நடைபெறுகின்றன வென்பதையும், ஸம்ஸ்கிருத ஆயுர்வேத நூல்களிலும் யூனானி முறைகளிலும் ஆங்கிலம் முதலிய இதர வைத்திய சாஸ்திரங்களிலும் உள்ள தத்துவங்கள் அல்லது அவசியமான அம்சங்கள் எவ்விதமானவை யென்பதையும், முற்கூறிய சரீரதத்துவம் முதலிய சாஸ்திரஸம்பந்தமான விஷயங்கள் வைத்தியத்தொழில் புரியும் தங்களுக்கு எவ்வளவு இன்றியமையாதவை யென்பதையும் விசாரிக்காமல், பழையமாதிரியான நடவடிக்கைகளையே பின்பற்றினால் இனி நமது நாட்டுவைத்தியரின் நிலைமை காசுக்கும் பிரயோஜனமில்லாமல், இராஜாங்கத்தாரின் நியாயமான அனேகவித நிர்ப்பந்தங்களுக்கும், படித்த வகுப்பாரான ஜனங்களின் நம்பிக்கையின்மைக்கும், அசாஸ்த்ரீயமான சில சிகித்ஸைகளைச் செய்வதால் ஏற்படும் பல துன்பங்களுக்கும் இடமுண்டாகுமே யென்றும் வருத்தப்படுகிறோம்.

**சுதேச வைத்திய முறைகளைச் சீர்திருத்துமுபாயம்.**

மேற்கூறிய விதமாக நமது பிராசீன வைத்தியகிரந்தங்களுக்கும், நமது தமிழ் நாட்டிலுள்ள ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்கும் ஆங்கிலேய வைத்தியர்களுக்கிருப்பதுபோல்செல்வாக்கும் செழிப்பும் உண்டாகவேண்டுமானால், இப்பொழுதுள்ள தூக்க நிலைமையை விட்டுக் கண்விழித்துப் பார்த்து,உலகம் இருக்கும் விதங்களையெல்லாம் உற்று நோக்கி, முன்செல்லுவதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்ய வேண்டும். மேனாட்டு வைத்தியம் இப்பொழுது மஹோன்னததசையை அடைந்து இராஜாங்கத்தாரின் உதவியைப் பல வகையிலும் பெற்று நன்கு பலமுள்ளதாயிருப்பதற்குக் காரணமென்னவெனில், கிரேட்ப்ரிடன், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள டாக்டர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை விசேஷமாயிருப்பதுடன், அனேக வைத்திய ஸங்கங்களை வெகு சிறந்த நிலைமையில் ஏற்படுத்தி அவற்றின் மூலமாய் அந்த டாக்டர்கள் அளவற்ற வைத்திய ஆராய்ச்சிகள் செய்தும், அவ்விதமாகப் புதிது புதிதான ஆராய்ச்சிகளினால் ஏற்படும் பயன்களையும் வேறுவிதமான சாஸ்த்ரீயவிஷயங்களையும் விளக்குவதற்கு நல்ல விற்பன்னரைக்கொண்டு வைத்தியஸம்பந்தமான சிறந்த பத்திரிகைகளை பிரசுர்த்தும், நூதனமான வைத்தியநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியும் வருவதேயாம். அங்குள்ள வைத்தியஸங்கங்களின் பெயர்களையும், வைத்திய பத்திரிகைகளின் எண்ணிக்கையையும்இங்குவரைவதற்கே இடமில்லை. மேலும் உலகத்தில் ஆங்காங்கு யாத்திரை செய்து ஒவ்வோரிடங்களிலுமுள்ள வைத்தியர்களுடைய அனுபவத்தில் வரும் அரிய வைத்திய முறைகளையும் பதார்த்த தத்துவங்களையும் தெரிந்துகொள்வதும் மிக அவசியமானது. இதற்காகவே, வைத்திய கல்பதரு என்னும் பத்திரிகையின் ஆசிரியரான வைத்திய ஜடாசங்கர் த்ரிவேதி என்பவர் இந்தியாமுடிய இவ் வைத்தியசாஸ்திர ஆராய்ச்சியின்பொருட்டு யாத்திரை செய்யப் புறப்பட்டிருப்பதாகவும்,முதலில் அவர் டில்லிக்குப் போய் அங்குள்ள சில ஆயுர்வேதவைத்திய சாலைகளையும் பாடசாலைகளையும் வைத்திய பத்திரிகை முதலியவற்றையும் அவற்றிற்கு அதிபதிகளான வைத்தியர்களையும் கண்டு நமது சுதேசவைத்திய சாஸ்திரத்தின் அபிவிருத்தி முறைகளைப்பற்றி ஆலோசித்து வருவதாகவும், பிறகு ஹரித்வாரத்திற்கு இவ்விதமான ஆராய்ச்சியின் பொருட்டுச் சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது. அன்றியும், பம்பாயில் இப்பொழுது ஜண்டுபோர்மக்யூடிகல் ஒர்க்ஸ் என்று ஔஷதங்களைத் தயார் செய்வதற்கு ஒரு சாலை ஏற்பட்டு, அதில் ஆங்கில ஔஷதங்களைப் போலவே ஆயுர்வேத ஔஷதங்களெல்லாம் இயந்திரம்முதலிய உபகரணங்களைக்கொண்டு தயார் செய்யப்படுவதால்,நமது வைத்தியர் மருந்து செய்துகொள்ளும் கஷ்டத்திலிருந்து விலகி அவ்வித ஔஷதசாலைகளிலிருந்து வேண்டிய மருந்துகளை வெகு ஸரஸமான விலைக்கு வரவழைத்துக்கொண்டு வைத்தியம் செய்வதும் ஒரு சீர்திருத்த முறையாகும். இந்தியாவைத் தவிர, மற்ற நாடுகளில் எங்கும் வைத்தியம் செய்பவர் வேறாகவும், ஔஷதங்களைத் தயார் செய்பவர் அவற்றை விற்பனை செய்பவர் இவர்கள் வேறாகவும் இருப்பதால் அவரது மருந்துகள் உருவத்திலும் குணத்திலும் சேர்மானத்திலும் ஒரே மாதிரியாகவும் அழகாகவும் மேன்மை பெற்றும் இருக்கின்றன. அன்றியும் இவ்வித சீர்திருத்தங்களுக்குத் தகுந்தவாறு, வைத்திய ரத்ன பண்டித டி. கோபாலாசாரியர் அவர்களால் நிர்வஹிக்கப்பட்டு வரும் ஆயுர்வேத

காலேஜைப்போல் பல வைத்திய பாடசாலைகளும் இன்றியமையாதனவாம்.

முடிவு. இவ்விதமாய் நமது வைத்தியருக்கு ஒருவித நூதனமான உத்ஸாஹத்தை ஊட்டுவதற்கும், அநந்த வைத்தியசாஸ்திரங்களிலுள்ள பற்பல அரிய விஷயங்களை அறிவிப்பதற்கும், மேனாட்டாரைப் போல் நாளுக்கு நாள் புதிது புதிதான சாஸ்திரமுறைகளைக் கண்டறிவதற்கு அவசியமான உபாயங்களை உணர்த்துவதற்கும், ரோகங்களைத் தெரிந்துகொள்வதிலும் சிகித்ஸை செய்வதிலும் பதார்த்தங்களின் தன்மை முதலியவற்றைப் பகுத்தறிவதிலும் மற்றும் பல விஷயத்திலும் வைத்தியர்களுக்கு உண்டாகும் ஸந்தேஹங்களைப் போக்குவதற்கும் ஒரு வைத்திய பத்திரிகை சிறந்த ரீதியில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இவ்வளவேயல்ல, இவ்வாறு விசேஷமாக வைத்தியர்களுடையவும் பொதுஜனங்களுடையவும் நன்மையை நாடி ரோகங்களை நிவ்ருத்தி செய்வதற்கும், ஆரோக்யத்தைக் காப்பதற்கும், வைத்திய விஷயமான சாஸ்திரங்களை விளக்குவதற்கும் உபயோகமாகும்படி இப்பத்திரிகை வெளியிடப்படுவதால், ஜனங்கள் அனைவரும் விசேஷமாய் வைத்தியரும் இப்பத்திரிகையினால் பேருதவி பெறுவரென்றும், பொதுஜனங்களுக்கு உண்டாகும் அவ்வித திருப்தியைக்கொண்டு நாமும் மிகக் களிப்புறலாமென்றும் நம்புகிறோம்.

---

## THREE POWERFUL NATURAL HUMOURS OF THE HUMAN BODY.

### வாத பித்த கபங்கள்.

இப்பெயர்கள் மூன்றும் இந்துக்களுக்கு அதிலும் சுதேச வைத்தியருக்குப் புதிதானவையல்ல. இந்துக்களில் பெரும்பான்மையோரும் இந்திய வைத்தியர்களில் ஒவ்வொருவரும் ஒரு ரோகியைப் பார்த்தவுடன் இம்மூன்றில் ஒன்றிரண்டோ அல்லது அனைத்துமோ விகாரமடைந்திருப்பதாகவும் கூறுவதியல்பு. ஆனால் இவற்றின் தத்துவங்கள் என்னவென்று எடுத்தறிவிக்கும் வைத்தியர் மட்டும் அரிது. ஆகையினாலேயே படிக்காத அல்லது சிறிது படித்த ஜனங்களைத் தவிர்த்து நன்கு கற்றறிந்த நாகரிக ஜனங்களுக்கு இவ்விஷயங்களில் நம்பிக்கைக் குறைவு நாளடைவில் ஏற்பட்டு வருகின்றது. ஆகையினால் இப்பொழுது இவற்றின் வாஸ்தவாம்சத்தை விசாரித்து அனைவரும் அறியுமாறு விளக்க வேண்டுவது மிகவும் அவசியம். ரோகங்களைப் பரீக்ஷிக்க ஆரம்பிக்கையில் வைத்தியர் அனைவரும் வாத பித்த கபங்கள் எந்த நிலைமையில் இருக்கின்றன வென்பதையே முதலில் கவனிக்கின்றமையாலும், சுதேச வைத்யநூல்களெல்லாவற்றிலும் ஆரம்பத்திற் பெரும்பாலும் இவ்விஷயமே கூறப்பட்டிருப்பதாலும், இப்பத்திரிகையின் முதல் ஸஞ்சிகையிலேயே இவ்விஷய விசாரணை ஆரம்பத்தில் செய்யப்படுவது அவசியமாயிற்று. ஆகையால் இங்கு ஸங்கிரஹமாய் இவ்விஷயத்தை விசாரிப்போம்.

வாதம், பித்தம், கபம் என்கிற இம்மூன்றும் ஆயுர்வேதபரிபாஷைப்படி மூன்று தோஷங்களெனப்படும். சரீரத்தில் ரோக காரணங்கள் எவையாகிலும் ஏற்பட்டால் அக்காரணங்கள் வாத பித்த கபங்களில் ஒன்றிரண்டையோ அல்லது மூன்றையுமோ முதலில் தாக்கி அவற்றை விஷமப் படுத்த, பிறகு அவ்விதம் விகற்பமடைந்த இவை சரீரத்திலுள்ள மற்ற தாதுக்களையும் (Tisseus) தூஷிப்பிக்கும் சுபாவமுடையவையாகையால் இவற்றிற்குத் தோஷங்கள் எனப் பெயர்வந்தது. ஆனால் இத்தோஷங்களின் சுரூபமென்ன? இவை சரீரத்திலிருக்குமிடம் யாவை? இவற்றின் வேலை

களென்ன? என்பதைப்பற்றியே இப்பொழுது விசாரம் செய்யப்படும். வளியில் எங்கும் வீசியடிக்கும் அல்லது மூச்சுவிடப்படும் காற்று போன்றதே வாதம் அல்லது வாயுவென்றும், வாந்தி முதலியது ஆகும்போது வெளிவரும் வயிற்றிலுள்ள மஞ்சள் நிறமான நீர்மாதிரியுள்ளது மட்டுமே பித்தமென்றும், ஜலதோஷம் பிடித்தவருடைய மூக்கிலிருந்து வெளியாகும் சளியே சிலேஷ்மம் அல்லது கபமென்றும் அனைவருடைய எண்ணமாயிருந்து வருகிறது. ஆனால் நாடி முதலியதைப் பரீக்ஷிக்கும் பொழுதும் தோஷங்களின் குறிகள் கூறப்படுகிறபடியால், இவ்விதம் வழங்கப்படும் கபம் முதலானது எவ்விதம் இந்த நாடி முதலியவற்றில் ஸம்பந்தப்படுமோ அதை மட்டும் யுக்தியுக்தமாகவும் பிரத்யக்ஷானுபவத்திற்கு இணங்கவும் அறிவிப்பவரில்லை. ஆனால் வாத பித்த கபங்களின் ஸ்வரூபங்கள் முற்கூறிய விதமாயிருப்பதாக நன்கு சாஸ்திரதத்துவவிசாரம் செய்தவர் கூறமாட்டார்.

மூன்று தோஷங்களையும் சரீரத்திலுள்ள மூன்றுவித சக்திகளாகக்கொள்ளவேண்டும்.* ஏழு விதமான தாதுக்களாலான சரீரத்திற்கு † வெளிப்புறங்களிலிருந்து ஏதேனும் பதார்த்தத்தினால் அல்லது வேறு எக்காரணத்தினாலாவது கெடுதி நேரிடாமலிருக்குமாறு சரீரத்தைக் காத்துக் கொண்டிருப்பதற்காக இம்மூன்று சக்தி விசேஷங்களைக் கடவுள் ஸ்ருஷ்டித்திருக்கிறார். ஏதாவது சரீரத்திற்கு ஸம்பந்தப்படாத ஒருபொருள் தேஹத்தினுள் சென்றால், இம்மூன்றில் ஒன்றிரண்டோ அல்லது அனைத்துமோ சேர்ந்து வெளிப்பொருளென்னும் பகையாளியை சரீரத்தை விட்டு அப்புறப்படுத்த முயல்கின்றன. இவ்வித ஸமயத்தில், வெளிப்பொருள் விசேஷவலிவுள்ளதாயிராமற் போனால், தோஷங்களெனப்படும் சக்திகள் அவற்றை வெளிப்படுத்தி மற்ற தாதுக்களைக் காப்பாற்றும். இதற்கு மாறாக, வெளியிலிருந்து வந்த பதார்த்தங்கள் வெகு வலிவுள்ளவைகளாயிருந்தால், தோஷங்களுடன் முதலிற் போராடி, பிறகு தோஷங்களுக்கும் வைஷம்யத்தை யுண்டாக்கி அவற்றின் மூலமாகவும் நேராகவும் சரீரத்திலுள்ள தாதுக்களைக் கெடுக்க முயல்கின்றன. இப்படி ரோகங்களை உண்டுபண்ணுவதற்குக் காரணமான விஷயங்கள் அல்லது வஸ்துக்களெல்லாம் நமது சரீரத்திலுள்ள தாதுக்களைத் தாக்குவதற்கு முன், தாதுக்களைக் காப்பதற்கென்று ஏற்பட்டிருக்கும் தோஷங்களென்னும் சக்திகளை எதிர்த்து அவற்றுடன் போராடவேண்டியிருப்பதாலேயே, எந்த ரோகமுண்டானாலும் ஒவ்வொன்றிலும் முதலில் வாத பித்த கபங்கள் விகற்பமடைகின்றன வென்றும், ஆகையினாலேயே எல்லா ரோகத்திலும் முதன் முதல் வாத பித்த கபங்களின் நிலைமைகளே பரீக்ஷிக்கப்பட வேண்டுமெனவும் சாஸ்திரம் முறையிடுகின்றது.

சரீரமானது ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்கிற ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டிருப்பதாக ஆர்யவைத்தியசாஸ்த்ரிகளைப் போலவே வேதாந்திகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சரீரத்திலுள்ள இந்த பஞ்ச பூதங்களும் அவற்றின் வேலைகளும் யாவை? இந்த

* நான்காவது சக்தி அல்லது தோஷமும் (Humour) ஒன்று க்ரீக்தேசத்தவரால் முன்னால் வழங்கப் பட்டதுண்டு. ஆயுர்வேத சாஸ்திரத்தில் இரத்தமும் ஒரு விதத்தில் தோஷமாகக் கூறப்படுகிறபடியால் இதை ஆதாரமாகக் கொண்டே க்ரீக்தேசத்தவரும் நான்கு சக்திகள் (Four Humours) என்று வழங்கியதாகக் கருதுகிறோம்.

† இரஸம், இரத்தம், மாம்ஸம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்லம் என்னும் இவ்வேழும் ஸப்த தாதுக்கள் எனப்படும்.

கேள்விக்கு விடையளித்துவிட்டால் மூன்று தோஷங்களின் தத்துவமும் ஒருவாறு அறியப்படலாம். அதாவது, சரீரத்திலுள்ள ஏழு தாதுக்களும் சேர்ந்து ப்ருதிவீ யென்னும் பூதத்தின் சில அம்சங்களால் ஆக்கப்பட்டனவாம். அப்படியானால் மிகுந்துள்ள நான்கு பூதங்களுக்கும் ப்ருதிவீபூதத்தினாலான ஏழு தாதுக்களும் ஆதாரமாக வேண்டுமல்லவா? ஆம்; ஏழு தாதுக்களும் கேவலம்யந்தமானவையும் அசைவதற்குச் சக்தியற்றவையும் கனமுமான பார்த்திவ வஸ்த்துக்களாலானதாலும், ஆகையினாலேயே அந்த தாதுக்கள் அவற்றிற்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொள்வதற்கும் தீங்குகள் நேரிடாவண்ணம் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கும் திறமையற்றவையாதலாலும், அவற்றைப் பாதுகாத்து அவற்றின் வேலைகளை கிரமமாய் நடத்துவதற்காக அப்பு, தேஜஸ், வாயு என்னும் வேறான மூன்று பூதங்களின் அம்சங்களால் முறையே கபம், பித்தம், வாதம் என்கிற மூன்று தோஷங்கள் உண்டாயின. ஆகையினால்தான் ஜலத்திற்குண்டான குணங்கள் யாவும் கபத்திற்கும், தேஜஸ்ஸின் குணங்கள் பித்தத்திற்கும், வாயுவின் குணங்கள் வாதத்திற்கும் வைத்திய சாஸ்திரத்திற் கூறப்பட்டுள.* ஆகையினால் வாத பித்த கபங்கள் என்னும் தோஷங்கள் வாயு, தேஜஸ், அப்பு என்கிற மூன்று பூதங்களின் அம்சங்களாலுண்டானவை யென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் சரீரத்திலுள்ள தாதுக்கள் பார்த்திவங்களென்றும், தோஷங்கள் மூன்றும் வாயு தேஜஸ் ஜலம் என்பவைகளாலுண்டானவையென்றும் ஏற்பட்டபின், ஆகாயம் என்னும் பூதம் சரீரத்தில் எதைச் சேர்ந்ததென்று கேட்கக் கூடும். ஆகாயம் என்னும பூதம் சூனியமான வஸ்த்துவாகத் தோற்றுவதால், அதுவும் நமது சரீரத்தினுள் அதற்கேற்ற ஓர் இந்த்ரியத்தை ஏற்படுத்தக் காரணமாயிருக்கிறது. இவ்வாறு ஆகாயத்தினாலான மஹாஸூக்ஷ்மமான இந்த்ரியமே மனதெனப் படுகின்றது. ஆகவே இப்பொழுது சரீரத்தில் ஐந்து பூதங்களும் இவ்விவ்விதமாக அடங்கியிருக்கின்றனவென்று விவரித்தோம். மிகவும் ஸ்த்தூலமான ப்ருதிவியின் அம்சங்களால் மிக ஸ்த்தூலமான தாதுக்களும், மிகவும் ஸூக்ஷ்மமான ஆகாயத்தின் அம்சத்தால் மிக ஸூக்ஷ்மமான மனதும் படைக்கப்பட்டதாக மொழிந்தோம். அன்றியும் ப்ருதிவியினாலான தாதுக்களுக்காக மூன்று தோஷங்கள் ஏற்பட்டிருப்பதுபோல் ஆகாயத்தினாலான மனதுக்கும் ஸத்வம், இரஜஸ், தமஸ் என்னும் குணங்களாகிற வெகு ஸூக்ஷ்மமானவேறுவித மூன்று தோஷங்களுண்டு. ஆகையினாலேயே மனிதரில் வாதப்ரக்ருதி, பித்தப்ரக்ருதி, கபப்ரக்ருதி என்று மூன்று ப்ரக்ருதிகள் கூறப்படுங்கால் ஆயுர்வேதநூல்களில் அந்த ப்ரக்ருதியுள்ள மனிதர்கள் முறையே தமோகுணமுள்ளவரென்றும், இரஜோகுணமுள்ளவரென்றும், ஸத்வகுணமுள்ளவரென்றும் கூறப்பட்டிருக்கிறது.* சரீரத்திலுள்ள வாத பித்த கபங்கள் முதன்முதலில் வைஷம்யப்பட்டு அவற்றின் மூலமாய் தாதுக்கள் விகாரமடைவதுபோல், ஸத்வ ரஜஸ் தமஸ்ஸென்னும் மானஸிக தோ

* அஷ்டாங்க ஹ்ருதயம், சரகஸம்ஹிதை இவற்றில் ஸூத்ரஸ்த்தானத்தின் முதல் அத்தியாயத்தையும், சரகத்தில் விசேஷமாய் வாதகலாகலீய அத்தியாயத்தையும், இத்துடன் வெளியிடப்படும் சார்ங்கதரஸம்ஹிதையையும் பார்க்க. [சார்ங்கதரஸம்ஹிதையில் இவ்விஷயம் சுருக்கமானது.]

* ஸுச்ருதஸம்ஹிதையில் சாரீரஸ்த்தானம் 4-வது அத்தியாயத்தில் இவ்விஷயம் விவரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க.

ஷங்களும் அவ்விதமே முதலில் ஏதாவது சில காரணங்களால் தாக்கப்பட்டு, அதனால் மானஸிக தோஷங்களுக்கு வைஷம்யம் ஏற்பட அதன்பிறகே மனதும் விகாரங்கொள்ளும்.

இம்மூன்று தோஷங்களின் ஸ்வருபங்கள் எத்தகையனவென்று விசாரித்து விஷயத்தை முடிப்போம். இங்கு ஆங்கிலேயரது சரீரதத்துவங்களின் கோட்பாட்டின்படி மூன்று விஷயங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். அவற்றுள் (1) நரம்பு மண்டலங்களின் (Nervous System) மூலமாகவே சரீரத்தில் தெரிந்தும் தெரியாமலும் அசைவு மூலமாய் எல்லாக் காரியங்களும் நடப்பதால், அக்காரியங்கள் யாவும் வாயுவென்னும் சக்தியினாலேயே நடந்தேறுவதாய் அறியவேண்டும். அந்த நரம்பு மண்டலங்களில் ஓடும் உணர்ச்சிக்குறிகளே (Impulse) வாயுவென்னும் சக்தி அல்லது வாததோஷமாகும். நினைத்தபோதெல்லாம் விஷயங்களும் வேலைகளும் வெகு வேகமாய் நடந்தேறுவதால், இந்த சக்தி வாதம் என்று கூறப்படுகிறது.* சரீரத்தில் எப்பொழுதும் எவ்விடத்தில் பரிசித்தாலும் வாயுவென்னும் சக்தியானது அவ்விஷயத்தை உடனே புத்திக்கு எட்ட வைக்கிறது. வாதமாவது, சரீரத்தில் உள்ளும் புறமும் ஏதாவது வெளிப்பொருள் வந்து கஷ்டப்படுத்தாமல் வெகு ஊக்கத்துடன் சரீரமெங்கும் வியாபித்திருந்து அதற்குண்டான உணர்ச்சியின் மூலமாய் சரீர தாதுக்களைக் காத்துவருகிறது. (2) உணவு முதலியவற்றைப் பக்குவம் செய்வதற்காகக் குடல்களில் அடங்கியுள்ள ஒரு வகையான ஜாடராக்னியென்னும் உஷ்ணமும், இரத்தத்தின் மூலமாய் சரீரமெங்கும் பரவியிருக்கும் தேஹச்சூடும் (Animal heat) பித்தம் என்பதாக வழங்கப்படுகின்றது. பித்ததோஷமென்னும் இந்த சக்தியானது சரீரதாதுக்களில் நடக்கவேண்டிய (Oxydation) அம்சங்களைத் தஹித்தும், தாதுக்களை எப்பொழுதும் அததற்குத் தகுந்த பக்குவமான நிலைமையில் வைத்தும் சரீரத்தைப் பாதுகாக்கக் கூடியது. (3) சரீரத்தினுள் சில குழாய்களில் ஓடும் நிணநீர் (Lymph) என்னும் திரவம் கபமாகவும் அதன் வேலையே கபத்தின் சக்தியென்றும் எண்ணவேண்டும். கபத்திற்குக் கூறியுள்ள வெண்மை நிறம் முதலியவை இந்த நிணநீருக்கும் இருப்பதுடன், கபமும் சரீரத்தைக் காத்து இரக்ஷிக்குங்குணமுடையதென்று முன் சொல்லியிருப்பதற்கேற்க, நிணநீரானது சரீரத்தினுள் வரும் எந்த வெளிப்பொருளையும் கவர்ந்திழுத்துத் தன்னிடம் பிடித்து வைத்துக்கொண்டு, பிறகு அப்பொருட்களை வெளியில் கழித்தோ, பதனழித்தோ, அவற்றினாலுண்டாகும் கெடுதிகளைச் சரீரத்தில் அணுகவிடாமல் தாதுக்களை இரக்ஷிக்குந்தன்மையது. நிணநீர் என்னும் கபத்திற்கு அவ்வித சக்தியிருப்பதாலேயே யானைக்கால், ப்ளேக் முதலான வியாதிகளில் கபமானது அவ்வியாதிகளுக்குக் காரணமான கிருமி முதலானவற்றைச் சேர்த்து நிணநீர்க் கிரந்திகளென்னும் (Lymphatic glands) தொடையிடுக்கு முதலிய இடங்களிலுள்ள சிறு கட்டி போன்ற அவயவங்களில் அடக்கி வைத்துத் தன்னுடைய சக்தியைக் கொண்டு முன் சொன்ன விதம் வேலைசெய்து சரீரத்தைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கின்றது. ரோகங்களை

* ஸம்ஸ்க்ருதத்தில் 'வா' என்னும் தாதுவிலிருந்து (Root) 'வாத' அல்லது 'வாயு' என்னும் பதம் உண்டாயிற்று. 'வா' என்கிற தாதுவுக்கு அசைவு, வாஸனை முதலியதின் உணர்ச்சி என்று இரு பொருளாதலால், அவ்விருவிதமான பொருளும் இந்த தோஷத்திற்குப் பொருந்துமென்று நிச்சயித்து வாதம், வாயு என்று பெயரிடப்பட்டது.

யுண்டாக்குவதற்கு பிராணிகளின் உடலில் உட்செல்லும் ஏதுக்களெல்லாம் அவ்வவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு சில வாதத்தையும், வேறு சில பித்தத்தையும், மற்றும் சில கபத்தையும் தாக்கி பிரத்யேகமாய் ஒவ்வொன்றை அல்லது இரண்டிரண்டை விஷமிக்கச் செய்வதியல்பு. சில மூன்று தோஷங்களையுமே ஒருமிக்க விஷமிக்கச் செய்யும் சுபாவமுள்ளவைகள். இந்த மூன்று தோஷங்களும் மனிதருக்குப் பிறக்கும் போதே தாதுக்களுடன் கலந்துண்டாவதுடன், ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தோஷம் மேம்பாடடைந்து மூன்றுவிதமான ப்ரக்ருதிகளையும் உண்டாக்குகின்றன. இவையே (1) வாதப்ரக்ருதி (Nervous), (2) பித்தப்ரக்ருதி (Bilious), (3) கபப்ரக்ருதி (Phlegmatic) எனப் படுகின்றன. ஒவ்வொரு தோஷமும் ஐந்தைந்து விதமாக ஸூக்ஷ்மமான பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருப்பதால், ப்ரக்ருதிகளிலும் அவ்விதமே வேறு சில வகைகளுமுண்டு. அவற்றைப்பற்றி மற்றொரு ஸமயத்தில் விவரிப்போம். இம்மூன்று தோஷங்களுள் வாதமானது மற்ற இரண்டு தோஷங்களையும் தூண்டி அவற்றிற்கு ஸஹாயமாயிருப்பதுடன், தாதுக்களையும் அவை செய்யவேண்டிய காரியங்களில் தூண்டியும், தனது ஆட்சியின் கீழ் சரீரமனைத்தையுமே வைத்துக்கொண்டும், ஸ்வதந்திரமாய் வேலை செய்துவரும் வெகு சிறந்த சக்தியுடையதாயிருக்கின்றது. மற்ற இர்ண்டு தோஷங்களும் சிறிது குறைவான சக்தியுடையவையாய் வாதத்திற்கு அதீனமாகவும், மற்ற தாதுக்களும் அவ்விதமே எல்லாத் தோஷங்களுக்கும் விசேஷமாய் வாதத்திற்கும் ஸ்வாதீனப்பட்டிருக்கின்றன.*

இவற்றைப்பற்றி இன்னும் விசேஷமாய் அறிய வேண்டிய ஸூக்ஷ்மாம்சங்கள் அதிகமிருப்பதால், தத்துவமறிந்தவர் சாஸ்த்ரீயமாயும் யுக்தியுக்தமாகவும் வியாஸங்கள் எழுதுவராயின் அவற்றை நமது பத்திரிகையில் பிரசுரித்து இன்னும் அனேக ஆராய்ச்சி செய்ய உத்தேசித்திருக்கின்றோம்.

---

## BLINDNESS IN INDIA.

## இந்துக்களின் நேத்திர ரோகம்.

BY

DR. E. V. SRINIVASACHARI, M.B. & C.M.

*Physician, Surgeon and Opthalmic Specialist.*

இந்தியாவில் ஜனங்களுக்கு நேத்திர ரோகங்கள் உண்டாவதற்குப் பொதுக் காரணங்களாவன.—(1) ஒவ்வோர் ஊரிலும் இரண்டொரு நாட்களுக்குமேல் தங்காமல் திரிந்து கொண்டிருக்கும் மூட வைத்தியர்களிடம் ஏராளமான ஜனங்கள் முன் பின் யோசிக்காமல் தமது நோய் கொண்ட கண்களை ஒப்பித்து விடுவது. (2) கண் கூடிவருவதற்காக ஏதோ தேவதைகளை நம்பி மூட பக்தியுடன் வைத்தியமே செய்துகொள்ளாமல் சும்மாயிருந்து விடுவதால் ஸௌக்கியமடையாமை. (3) உண்மையில் கொடியவையான சில நேத்திர ரோகங்கள் வெளிப்படையில் அற்பமாகத் தோற்றுவதால் அவற்றைச் சரிவர அறியாமல் அஜாக்ரதையாயிருந்து நேத்திரம் முழுமையையும் கெடுத்துக்கொள்ளுதல். (4) விசேஷ அனுபவமில்லாமலும் மிகவும் சிரத்தையுடன் கவனிப்பவர்போல் காட்டிக்

---

* "பித்தம் பங்கு கப: பங்கு: பங்கவோ மலதாதவ:। வாயுநா யத்ர நீயந்தே தத்ர கச்சந்தி மேகவத்."—பித்தம் கபம் என்னும் இரண்டு தோஷங்களும் ஏழு தாதுக்களும் ஸ்வாதந்த்ரியமற்றவை; வாயுவினால் அடித்துத் தள்ளப்படும் மேகம் போல், வாதமென்னும் தோஷத்தினால் ஏவப்பட்டு அதன் போக்குக்குத் தகுந்த செயல்களை மற்ற தோஷங்களும் தாதுக்களும் செய்து வருகின்றன. [சார்ங்கதரஸம்ஹிதையைப் பார்க்க.]

கொள்பவருமான கண்வைத்தியரிடத்தில் துரத்ருஷ்ட வசத்தினுல் அகப்பட்டுக்கொள்வது.

கண் கெடுவதற்குக் காரணமான மேற்கூறிய தீங்குகள் ஸம்பவிக்காமலிருக்க வேண்டுமானுல் ஜனங்களுக்குப் பொதுக் கல்வி கற்பிப்பதும், பொது நன்மையில் கருத்துள்ளவர்கள் ஊரூராய்ச் சென்று, கண்ணேய்களுக்கு ஆரம்பத்திலேயே தகுந்த வைத்தியம் செய்துகொள்ள வேண்டிய அவச்யத்தைப் பற்றி ஜனங்கள் நன்கறியுமாறு பிரஸங்கம் செய்வதும், யோக்யதை பெறுமல் கண் வைத்தியரென்று சொல்லிக் கொள்பவரை வைத்தியம் செய்யவொட்டாமல் இராஜாங்கத்தார் தடுத்தலும் அவசியமானவை. இந்தியருக்குக் கண்கெடுவதில் விசேஷமாயுள்ள காரணங்களைக் குறித்தும், அவ்வாறு கெடுதியுண்டாகாமல் நாளுக்கு நாள் அத்தீங்குகளைக் குறைப்பதற்கு வேண்டிய முயற்சிகளைப்பற்றியும் சற்று விவரிப்போம்:—

விசேஷமாய் நேத்திரம் கெடுவதற்கு ஒருவித காரணம் என்னவென்றுல்—ஆரம்பத்தில் மேல் இரப்பையில் வர்த்மரோகம் என்னும் துர்மாம்ஸவளர்ச்சி (Granular Ophthalmia) உண்டாய், அது காலக்ரமத்தில் கீழ் இரப்பையிலும் பரவுவதேயாம். (கண்களுக்குள் மாம்ஸபாகமான வர்த்மாவைவிட்டு கண் மத்தியில் இந்த ரோகமுண்டாகாது). வர்த்மரோகமானது ஒரு வகையான தொத்து வியாதியாகும். அதாவது ஒரு வீட்டில் புருஷனுக்கு வந்தால் அவனது மனைவிக்கும், ஒரு குழந்தைக்கு வந்தால் அத்துடன் விளையாடும் மற்றக் குழந்தைகளுக்கும் இந்த வர்த்மரோகம் பரவும். இந்த ரோகம் மகம்மதிய ஜாதியில் விசேஷமாய் உண்டு. அவர்களில் கண்களுக்கு மை தீட்டிக்கொள்வதற்கு ஒரே மைக்கூடை பலர் உபயோகிக்கின்றுர்கள். ஆகையினுலேயே பலாது கண்களிலுள்ள தோஷங்கள் இதிற் சேருவது ஸாதாரணமாதலால், இந்த மைக்கூடு ஸஹஜமாகவே நேத்திரரோகத்திற்கு இருப்பிடமாகிறது. இவர்கள் உபயோகப்படுத்தும் ஸுர்மா என்னும் நீலாஞ்ஜனவஸ்து வர்த்மரோகத்தை விளைவிக்கக்கூடும். காற்றில் மிருதியாகப் பறக்கும் புழுதியும் இந்த ரோகத்திற்கு மற்றொரு காரணமாகும். இவ்வுலகத்திலெங்குமுள்ள யூதர்கள் (Jews) என்னும் ஜாதியார் இவ் வியாதியினுல் விசேஷமாய் வருந்துகிறுர்கள். தாழ்ந்த ஜாதியாரிலும் இந்த ரோகம் விசேஷமாயிருப்பதைக் காணலாம். ஈஜிப்டில் பாடசாலைகளில் உயர்வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளில் 100-க்கு 92 பேர் இதே ரோகத்தினுல் பிடிக்கப்படுகிறுர்கள். இந்த வியாதியின் குறிகள் காரணங்கள் இவற்றைப் பற்றிய தத்துவங்கள் இன்ன விதமானவை யென்று இன்னும் நன்றுகக் கண்டறியவில்லை. எவ்விதமான நுண்ணிய உயிர்கள் (micro-organism) இதற்குக் காரணமாகின்றனவோ அதுவும் தெரியவில்லை.

வர்த்மரோகம், மேற் கூறியவாறு மேல் இரப்பையில் பரவியபின், கருவிழியிலும் வியாபித்துக் கண்ணை மங்கலாக்கிப் பார்வையையும் குறைக்கிறது. இவ்விதம் இயற்கைத் தன்மையிழந்ததனுல், கண்ணின் உள்ளமைப்பு வியாதிகொண்ட பாகத்தின் வழியாய் வெளியிற் பிதுங்கி நிற்கும். அப்பொழுது கண் பார்வைக் கெடுவது மல்லாமல் நேத்திரம் முடியவும் சீர் குலைந்து விடுகின்றது. இந்த வர்த்மரோகம் இரப்பைகளின் உள் பக்கத்தில் நாம் காணக்கூடியதான மாம்ஸபாகத்தில் உண்டாகின்றது. இந்த வியாதியானது, மூக்குக்கு அடியிலுள்ள நுட்பமான துவாரத்தின் மூலமாய்

குவளைப் பையனுள் (Lachrymal Sac) வியாபித்து அப்பையைக் கெடுத்து ஒரு வகையான துர்மாம்ஸத்தையும் (Lachrymal Obstruction) வளரச் செய்கிறது; என்றால், கண்ணீரானது இயற்கையாகப் பொசிவதுபோல் மூக்கு தொண்டை இவைகளுக்குள் பிரவேசிக்க முடியாமல், வளர்ந்திருக்கும் சதையினால் தடைபடுகின்றது. குவளைப்பை பெரிதாவதால் குவளையின் பாகம் வீங்கி நீர் வடியத் தொடங்கும். அந்த பையில் சீழுமுண்டானால் கண்ணில் ஜலம் வடியும்போது கூடவே சீழும் வெளிவரும். இந்த ரோகத்திற்கு ஆங்கிலத்தில் டாக்ரோஸிஸ்டிடிஸ் (Dacroscystitis) எனப் பெயர். இவ்வியாதியானது இந்தியருக்குண்டாகும் கண்ணோய்களில் அழுகும் தன்மையுள்ளதான கருவிழியிலுண்டாகும் ஒருவித கெட்ட புண்ணுக்குக் காரணமாகிறது. இதனால் திருஷ்டியின் பார்வைச் சிறிது குறைவுபடுவதும், முழுப் பார்வையுமே கெடுவதும், நேத்திரகோளம் அனைத்துமே அழிந்து விடுவதும் உண்டு. மேஹரோகத்தினாலுண்டாகும் வேறொரு வர்த்மரோகமும் கண் அழிவதற்குக் காரணமாகும். இது ஸாதாரணமாய் நடுப்பிராயத்திலுண்டாகிறது. இதனால் கருவிழியின் சுபாவம் மாறி வெவ்வேறளவான பார்வைக்குறைவுகளுண்டாகின்றன.

கருவிழியின் ஓரங்கள் வீக்கங்கொண்டு உண்டாகும் ஒரு வகையான கண்ணோய் இங்கிலீஷில் ஐரிடிஸ் (Iritis) என்று வழங்கப்படும். இது விசேஷமாக ஸ்த்ரீஸம்பந்தமான சூகதோஷத்தைக் (Syphilis) காரணமாகக் கொண்டு உண்டாகும் வெகு உபத்திரவகரமான வியாதி. ஆரம்பத்தில் இது உண்டாவதற்குக் காரணமான சூகதோஷத்திற்குத் தகுந்த சிகித்ஸை செய்வதுடன் கண்ணுக்கும் நல்ல மருந்தை உபயோகித்து வந்தால் அனுகூலமாகும். இந்த ரோகத்திற்கு நேத்திரத்தில் வலி, சிவப்பு, நீர்வடிதல், கூச்சம் இவைகளே குறிகளாம். இதன் விசேஷ நிதாநம் முதலியதைப் பற்றி மற்றொரு வியாஸத்தில் பின்னால் விவரிப்போம். பார்வையும் மங்கலாவதுடன் கருவிழியின் மத்தியிலுள்ள கிருஷ்ணமணி (Lens) என்னும் படிகம் போன்ற அவயவத்திலும் இந்த தோஷம் படிந்து நிற்கும். இவ்வாறு தோஷம் படிவதால் கண் குருடாகிவிடும். இந்த வியாதி மேஹரோகம், ட்யூபர்குலைன் என்னும் புற்று வியாதி, கண்ணில்படும் காயம், கீல்வாயு இவைகளாலுமுண்டாகும். இந்த ரோகத்திற்குக் காரணமான மேற்படி வியாதிகளுக்குத் தகுந்த சிகித்ஸை செய்தால் கண்ணோய் தானே நிவ்ருத்தியாய் விடும். இந்த வியாதியானது ஸௌக்கியப்படுத்த முடியாதபடி திருஷ்டியை அழித்த போதிலும், ஆரம்பத்திலேயே வைத்தியம் செய்தால் வெகு திருப்திகரமாய் குணத்தையுண்டாக்கலாம்.

கண் கெட்டுப் போவதற்குக் காயம் படுவதும் ஒரு காரணமாகும். இதற்குத் தகுந்த சிகித்ஸையை உடனே செய்தால் இவ்வித காரணத்தினால் நேரிடும் தீங்குகள் விசேஷமாயிராது. சில ஸமயங்களில் உடைந்த ஸோடா பாடலிலிருந்து சிதறிய கண்ணாடித்துண்டுகளும் அவற்றைப் போன்ற இதர வஸ்துக்களும் கண்ணுக்குள் தைத்து உட்புகுந்து விடுவதுண்டு. இவ்வித சல்யம் ஸாதாரணமாய்ப் பொத்தியவுடன் உட்சென்றுவிடுமேயன்றி, கையால் எடுக்கக்கூடிய விதமாய் வெளியில் தெரிவது அரிது. கண்ணுக்குள் நுழைந்து விட்டாலும் ஜலம் சிறிது வடியக்கூடுமேயன்றி, திருஷ்டியின் பார்வைக்குக் குறைவு நேரிடுவதில்லை. ஆகிலும் இவ்வித

மான உபத்திரவங்களில் நோய்கொண்ட கண் ஸாதாரணமாகக் கஷ்டமின்றிருக்கையிலும் மற்றொரு கண் தொந்தரவடைவதியல்பு. வெகு நாட்களாய் மற்றொரு கண்ணில் வியாதியிருப்பதை இக் குறி அறிவிக்கின்றது. இந்த மாதிரி நிலைமைகளில் சிகித்ஸை என்னவென்று கேட்டால்—இவ்விஷயம் சிந்திக்கவும் வெகு பயங்கரமாயிருக்குமாயினும் வேறு கதியில்லையானதால்—முன்னால் நோய் கொண்ட கண்ணை அடியோடு பெயர்த்தெடுத்து விடவேண்டும். படிப்பில்லாத நாட்டு ஜனங்கள் இதனாலுண்டாகும் தீங்குகள் இவ்விதமானவை யென்று யோசிக்காமல் இத்தகைய சிகித்ஸையை ஒப்புக்கொள்ளார்கள். படித்த இந்தியரும் ஆங்கிலேயரும் பல ஸமயங்களிலும், தலைவிதியென்று நிச்சயித்து, கெட்டுப்போன கண்ணை எடுத்து எறிந்து விடுவதற்கு உடன்படுகிறார்கள். என்னுடைய கண்ணுக்குள் ஏதேனும் கண்ணாடித்துண்டு போன்றது புகுந்துகொண்டு அதனால் பெருந்தீங்கு நேரிடும்போலிருக்கப் பார்த்தால், உடனே சஸ்திர சிகித்ஸகரிடம் சென்று அந்த கண்ணை யெடுத்தெறிந்து விடுவதற்கு உட்படுவேன். ஸாதாரண கண்வலியையும் கவனிக்காமல் விட்டுவிட்டால் அதுவும் பார்வையைச் சிறிது மந்தமாக்கும். சுண்ணாம்பு முதலிய காரங்களைக் கண்களில் விஷயமறியாமல் இட்டுக்கொள்வதாலும் பார்வை கெடும்.

கருவிழியின் மத்தியபாகத்தை ஒருவித நீல நிறமாகச் செய்யும் வெகு கொடியதான க்ளாகோமா (Glaucoma) என்றொரு வியாதியுண்டு. இவ்வித நிறமே இப்பெயரிடுவதற்கும் காரணமாயிற்று. இந்த ரோகத்தில் அநேக ஸமயங்களில் ரோகிக்குக் கண் தெரிந்தும் தெரியாமலும் பலவாறான நிலைமையுண்டாகும். நேத்திரகோளம் மிக விறைத்துப் போவது அல்லது கடினமாவதே இதன் முக்கிய இலக்ஷணமாகும். கண்ணானது கல்லைப்போல் இறுகி அதனுள்ளடங்கிய உறுப்புகளை யெல்லாம் உருமாறச் செய்கின்றது. விசேஷமான வருத்தத்தினால் மனம் மிகவும் உருகி, அதனால் தலைவலி பித்தவாந்தி கண்வலி இவை உண்டாய் சீக்கிரத்தில் பார்வை அதிகமாகக் குறைந்து வருவதாலேயே இந்த வியாதி உற்பத்தியாகின்றது. இப்படிப் பட்டவனுக்கே மற்றொரு ஸமயம் இம்மாதிரி உபத்திரவம் நேர்ந்தாவது முந்தின வியாதியின் வழியே தொடர்ந்தாவது நாளுக்கு நாள் பார்வையை விசேஷமாகக் குறைத்து விடுகிறது. இன்னும் இவ்வியாதியின் நிதானங்கள் நன்கு விளங்கவில்லை. ஔஷதமூலமாகவும் சஸ்திர சிகித்ஸைமூலமாகவும் இதற்கு ஒருவாறு பரிஹாரம் செய்யலாம். சஸ்திரசிகித்ஸையினால் பெரும்பாலும் ஸௌக்ய மேற்பட்ட போதிலும், வெகு நாட்பட்ட வியாதியாயிருந்தால் வலி மட்டும் நிற்கலாமேயன்றி, திருஷ்டிக்குப் பார்வை யென்னமோ திரும்பவும் வராது. இந்த க்ளாகோமா என்னும் வியாதியை ஐரிடிஸ்ஸென்னும் ஸாதாரண கண்வலியென்றும் நினைத்து பிரமிப்பவரும் சிலருண்டு. அவ்விதமாய் பிரமைக்கு இடங்கொடாமல் முதலில் சிமையிந்துப்பை நன்கு பேதியாகுமாறு ஸாப்பிட்ட பின் தகுந்த கண்வைத்தியரிடம் காட்டிக்கொள்வது நலம்.

காட்ராக்ட் (Cataract) என்னும் காசரோகமும் பார்வையின்மையை விளைவிக்கும். சஸ்திரத்தைக்கொண்டு அந்த காசத்தை அடியோடு களைந்து எறிந்துவிட்டால் பார்வைக் குறைவு நீங்கிவிடும். வயதானால் தலைமயிர் நரைப்பதுபோல் கண்ணுக்குள்ளிருக்கும் மணியும் ஒருவாறு வெளுத்துவிடுகிறது. இது சிறிது காலம் இருக்கக்கூடிய பார்வைக்

குறைவேயன்றி நிரந்தரமாகக் கண்பார்வை அழிந்துவிடுமென்று நினைக்கக்கூடிய வியாதியல்ல. ஏனெனில் சிகித்ஸை செய்தவுடன் கண்ணாடியுபயோகித்தால் கண் சுபாவமாக முன்னிருந்த நிலைமையைப் பெற்றுவிடும், கண்ணுக்குள் உற்பத்தியான காசமென்னும் காட்ராக்டை சஸ்திரத்தினால் களைந்தெடுத்து வெளியில் எறிந்துவிடவேண்டுமேயன்றி, அதைக் குத்தி நேத்திரத்திற்குள்ளேயே ஒரு மூலையில் தள்ளிவிடக்கூடாது. ஆனால் ஊரூராய்த் திரியும் படிப்பில்லா வைத்தியர்கள் இன்றைக்கும் காசத்தைக் குத்தி நேத்திரத்திற்குள்ளேயே தள்ளிவிட்டு அதனால் பின்னிட்டுச் சிறிது காலத்திலேயே முழுநேத்திரத்துக்குமே கெடுதியை விளைவிக்கின்றனர். ஊருக்குள் நுழைந்த புலியை வெளியில் துரத்திச் சுடாமல் ஊருக்குள்ளேயே எங்கேயாவது அடக்கி வைத்திருந்தால் எவ்விதமான தீங்கு ஜனங்களுக்கு நேரிடுமோ அவ்விதமான தீங்குகள் கண்ணுக்குள்ளடக்கிய காசத்தினால் நேத்திரத்தின் மற்ற உருப்புகளுக்கும் நேரிடுமென்பதை ஜனங்கள் நன்குணரவேண்டும்.

இளங்குழந்தைகளுக்குண்டாகும் கண்ணோய்கள்:—தாய் தந்தையருக்கு மேஹரோகமிருந்தால் அதனால் குழந்தைகளுக்கும் கண் மங்கலடைந்து நாளடைவில் குருடாய்விடும். இதற்கு முன்ஜாக்கிரதையாயிருந்து, அக்குழந்தைகள் பிறந்தவுடன் பூதிநாசகம் (Disinfectant) என்னும் தோஷஹரமான சில திராவகங்களைக் கொண்டு குழந்தைகளின் கண்களை அலம்புவதால் பிறகு நேரிடக்கூடிய. பார்வையின்மையை ஒருவாறு தடுக்கலாம். இவ்விதஉபாயத்தினால் உலகத்தில் எண்ணிறந்த ஜனங்கள் அந்தகராகாமலிருப்பரென்பது நிச்சயம். தாய் தந்தையருக்கு சூகதோஷம் (Syphilis) இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கும் கண்பார்வை மங்கலடைவதும் அல்லது அடியோடு அந்தகத்தன்மை நேரிடுவதுமுண்டு. இவ்விதமான கண்ணோய் ஏழு வயதுக்குமேல் பதினான்கு வயதுக்குள் ஸம்பவிக்கும். சூகதோஷமுள்ளவருக்குப் பிறந்த குழந்தைகளிடமும் சூகதோஷமென்னும் ஒருவகையான மேஹரோகத்திற்குண்டான குறிகள் இருக்குமாதலால், அக்குறிகளைக்கொண்டு அக்குழந்தைகளுக்குண்டாகும் கண்ணோய்களின் தன்மையையும் அறியலாம். உணவு குறைவுபடுவதும், தாறுமாறாக உபயோகிக்கப்படுவதும் கண் கெடுவதற்குக் காரணமாகும். இவ்விதமான உணவுகளால் தேஹம் க்ஷீணித்து வருமாகையால், அவ்விதமே தேஹத்துடன் நேத்திரத்தின் பார்வையும் கிரமமாகக் குறைந்து வரும். இந்நிலைமையில் கண்ணானது அதன் ஒளியை யிழந்து உலர்ந்து மங்கலாகும். பிறகு புண்ணாகப்போய் மிகக் குறுகியும்விடும். இவ்விதமான குழந்தைகளுக்கு நல்ல தாதிகளையேற்படுத்துவதுடன் தகுந்த உணவுகளையும் கொடுத்துவரவேண்டும். சுத்தமான பசும்பால், காட்லிவராயில் என்னும் மீனெண்ணெய் முதலியவை குழந்தைகளைப் போஷிப்பதற்குத் தகுந்தவைகளாகும். இவ்விதம் செய்தால் சரீரம் புஷ்டியடைந்து வருவதுமல்லாமல் சரீரத்துடன் குழந்தைகளின் நேத்திரமும் நல்ல நிலைமைக்கு வரும்.

---

## HOW TO STUDY THE AYURVEDA.

## ஆயுர்வேதத்தைப் படிக்கும் முறை.

By

*Vaidyaratna*

PANDIT D. GOPALA CHARLU, A.V.S.

*Ayurveda Marthanda and Bhishangmani.*

ஆயுர்வேதத்தைப் படித்தல் படிப்பித்தல் முதலியதைப்பற்றி அறிவதற்கு முன் ஆயுர்வேதத்தின் ஸ்வரூபம், அதன் பழமை, பகுதி

கள், அது தொடர்ந்து வந்த பரம்பரை முதலியவற்றை அறிவது அவசியமானதால் முதலில் சுருக்கமாக இவற்றைப்பற்றி விவரிப்போம்.

### ஆயுர்வேத சப்தத்தின் விற்பத்தி.

இந்த சாஸ்திரத்தின் மூலமாய் ஆயுளைப் பெறுவது அல்லது ஆயுளை அறிவது, அல்லது தகுந்த குறிகள், இன்ப துன்பங்கள், ஹிதம் அஹிதம், பிரமாணம் முதலியவற்றால் ஆயுளின் தன்மையை அறிவிப்பது, அல்லது ஆயுள் வளர்வதற்கேற்றவை அல்லது ஏற்காதனவற்றைத் தெரிவிப்பது என்று இவ்விதமாக ஆயுர்வேதமென்னும் சப்தத்திற்கு விற்பத்தி கூறப்படுகிறது.

### ஆயுர்வேதத்தின் பழமை.

'ப்ரஹ்மா ஸ்ம்ருத்வாயுஷோ வேதம்' என்கிற மேன்மக்கள் கூறிய பிரமாணவசனத்தினால், ஆயுர்வேதம் உலகஸ்ஷருடி முதற்கொண்டு இருந்துவருவதாக நம்புகிறோம். மேலும் 'ருக்வேதஸ்யோபவேத:' என்று வியாஸரியற்றிய சரணவ்யூஹத்திலுள்ள வாக்கியத்தினால் அநாதியான ருக்வேதத்திற்கு இது உபவேதமாகவும், 'உபாங்க மதர்வவேதஸ்ய' என்கிற ஸுச்ருதருடைய வசனத்தினால் அதர்வணவேதத்திற்கு உபாங்கமாகவும் மொழியப்பட்டிருப்பதாலும், அதர்வணவேதத்தில் 'ஸுமித்ரா ந ஆப ஒஷதயஸ் ஸந்து' என்றும், அ. 6. ம 22; யஜுர்வேதத்தில் 'த்ரிர் நோ அச்விநா திவ்யாநிபேஷஜா' என்றும் 1-3-4 ருக்வேதத்திலும், 'ஸத்யோ ஜங்காம் ஆயஸீம் விஸ்பலாயை' என்று ருக் 1. அ. 8. ஸூ 186, 116, 5. ருக்வேதத்திலும், 'யுவம் ச்யவாநமச்விநா ஜரந்தம் புநர் யுவாநம் சக்ரதுச்சசீபி:' என்று 1-8-5 ருக்வேதத்திலும், 'நக்தம் ஜாதாஸ்யோஷதே' என்று 1-5-23 அதர்வணவேதத்திலும், 'வாத ஆவாது பேஷஜம்' என்று 8-8-44 ருக்வேதத்திலும் எண்வகையான அங்கங்களுடனும் கூடிய ஆயுர்வேத வைத்திய விஷயத்தை அறிவிப்பதான ச்ருதிகள் அநேகம் காணப்படுவதாலும் ஆயுர்வேதவைத்திய சாஸ்திரம் மிகவும் ப்ராசீனமெனத் தோன்றுகிறது.

### ஆயுர்வேதவைத்தியத்தின் வகுப்புகள்.

அவ்வித ஆயுர்வேதமானது பற்பல வகையான சிகித்ஸைகளின் ஸௌகர்யத்திற்காக (1) சல்யதந்த்ரம் (Science of Surgery, (2) சாலாக்யதந்த்ரம் (Science of Eye, Nose, Throat, etc., Diseases), (3) காயசிகித்ஸை (General Treatment), (4) பூதவித்யை (Demoniacal Diseases), (5) கௌமாரப்ருத்யம் (Management of Children), (6) அகததந்த்ரம் (Texicology), (7) இரஸதந்த்ரம் (Science of Reguvoration), (8) வாஜீகரணதந்த்ரம் (Science of Aphrodisiacs) என்று எட்டுவித பிரதான கிளைகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

### சல்யதந்த்ரம்.

விரணங்களில் பிரவேசித்திருக்கும் துரும்பு, கல்லுகளின் துண்டு, இரும்புமுளைகள், எலும்புகளின் சக்கை, தூசுகள், நகம், மயிர், இறுகிய இரத்தம், சீழ் முதலிய பதார்த்தங்களை வெளியிலெடுக்கும் உபாயங்களையும், கருப்பையிலேயே இறந்துபோன சிசுவை அங்கிருந்து வெளிப்படுத்த வேண்டிய வகையையும், அக்ரமப்ரஸவங்களை ஸுகப்ரஸவமாக மாற்றுவதற்குண்டான மாதிரிகளையும் இந்த தந்த்ரம் விவரிக்கின்றது. மேலும் (1) சேத்யம் (Incising), (2) பேத்யம் (Excising), (3) லேக்யம் (Scraping), (4) வேத்யம் (Puncturing (5) ஏஷ்யம் (Probing), (6) விஸ்ராவ்யம் (Extracting), (7) ஆஹார்யம் (Se-

creting and Evacuating fluids), (8) ஸேவ்யம் (Suturing) என்கிற எண் வகையான சஸ்திரகர்மங்களையும் இவ்விபாகம் போதிக்கின்றது.

(1) மண்டலாக்ரம், (2) கரபத்ரம் (Knife, Saw, etc., for incising and scraping), (3) வ்ருத்திபத்ரம், (4) நகசஸ்த்ரம், (5) உத்பலபத்ரம், (6) அர்த்ததாரை, (7) முத்ரிகை (Raron, Nail, Clipper, Lancet, etc., for incising), (8) த்ரிகூர்ச்சகம், (9) குசபத்ரம், (10) ஆடீமுகம், (11) சராரீமுகம், (12) அந்தர்முகம் (Needle, Tracer, Scissors, etc., for extracting and secreting), (13) குடாரிகை, (14) ஆரா, (15) வேதஸபத்ரம், (16) வ்ரீஹிமுகம் (Axe, Awl, Knife, Needle, etc., for puncturing), (17) படிசம், (18) தந்தசங்கு (Hook or Angle, Dental Fincers for Extracting Solid Bodies like Tooth), (19) ஏஷணீ (Probe or Director for probing), (20) ஸூசி (Needle for suturing) முதலிய சஸ்திரங்களை உபயோகிக்கும் விதங்களையும் கூறுகிறது.

(1) ஸ்வஸ்திகயந்த்ரம் (Forceps), (2) ஸந்தம் சயந்த்ரம் (Tongs), (3) தாலயந்த்ரம் (Hook-like instrument,) (4) நாடீயந்த்ரம் (Tubular Syringes, Enemas, etc,), (5) சலாகாயந்த்ரம் (Bougies), (6) உபயந்த்ரம் (Minor Surgical (accessories, Thread, DressingCloth, Lints etc;) இவை முதலிய யந்த்ரங்களை உபயோகிக்க வேண்டியவிதங்களையும், அக்னி காரம் முதலியவற்றைக்கொண்டு எந்தெந்த ஸமயங்களில் எவ்வெவ்விதமான தாஹகர்மங்கள் செய்யவேண்டுமென்பதையும், விரணங்களுக்கு சிகித்ஸைகள் செய்யவேண்டிய மாதிரிகளையும் இவ்விபாகம் அறிவிக்கின்றது.

சாலாக்ய தந்த்ரம்.

தோளுக்கு மேற்பட்ட அவயவங்களான கண், காது, மூக்கு, பற்கள், நாக்கு, தொண்டை, கழுத்து, தலை முதலானவற்றிலுண்டாகும் வியாதிகளையும் அவற்றின் நிதானம் சிகித்ஸை முதலியவற்றையும் கூறுவது சாலாக்யம் எனப்படுகிறது.

காயசிகித்ஸை.

குறிப்பான ஒரு அவயவத்திற்காவது, ஒரு அவயவத்தின் ஏதோ ஒருபாகத்திற்காவது, ஸர்வசரீரத்திற்குமாவது ஸம்பந்தித்த ஜ்வரம், அதிஸாரம், உன்மாதம், குஷ்டம், இரத்தபித்தம், அபஸ்மாரம், ப்ரமேஹம், இருதயரோகம், அச்மரீ என்னும் மூத்திரரோகம், பார்ச்வவாயு முதலிய வியாதிகளையும் அவற்றின் நிதான சிகித்ஸைகளையும் நிரூபிக்கும் பாகம்.

பூதவித்யை.

விசேஷமான தொந்தரவுகளுண்டாக்குபவையான தேவதைகள், அஸுரர், யக்ஷர், பிசாசங்கள், கந்தர்வர் முதலான கிரஹங்களின் ஸம்பந்தவசத்தினால் உண்டாகும் ரோகங்களை அறிவிப்பது, அவற்றின் சாந்திகர்மங்களுக்கு ஏற்றவையான மணி மந்திர ஒஷதிகளைப்பற்றிய விவரங்களை விதிப்பது, அவ்வித துஷ்டகிரஹங்களை ஓட்டுமுபாயங்களையும் பலிகளிடும் வகையையும் உணர்த்துவது என்னும் இவ்விஷயங்கள் இப்பகுதியில் சொல்லப்படுகின்றன.

கௌமாரப்ருத்யம்.

குழந்தைகளை ஆரோக்யநிலை தவறாமல் போஷிக்கவேண்டிய விதம், தாதிகளின் முலைப்பால் குழந்தைகளின் சரீரத்திற்கு ஏற்காததாய் அல்லது போதாததாயிருக்கையில் அப்பாலை சுத்தமாக்குவதற்கும் விருத்தியாக்குவதற்கும் செய்ய வேண்டிய உபாயம், இளம்பிராயத்தில்

அசுத்தமான முலைப்பாலாலும் வேறு காரணங்களாலும் வரும் பிணிகளின் நிதாந சிகித்ஸாதி விஷயம், பாலகிரஹதோஷம் அதன் சுரூபம் சிகித்ஸை இவற்றின் கிரமம் முதலானவை இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

அகத தந்த்ரம்.

பாம்பு, தேள், செய்யான், நண்டுவாய்க்காலி முதலிய விஷ ஜந்துக்கள் கடிப்பதாலுண்டாகும் குறிகளையும், அவற்றிற்குத் தகுந்த பரிஹாரங்களையும் போதிக்கும் வகுப்பு. மேலும் இதில் பிராணிஜ ஔத்பித கிருத்ரிமங்களான விஷங்களை விஷந்தீண்டிய சரீரத்திலிருந்து வெளிப்படுத்து முபாயங்களும் படலாம்.*

இரஸாயந தந்த்ரம்.

இது ஆயுள் ஆரோக்யம் இவற்றை விருத்தி செய்து சரீரத்திற்குள்ள வலிமையை வெகுகாட்களளவும் நிலை நிறுத்தல், புத்தியின் சக்தியை விருத்தி செய்தல் முதலியவற்றை நிரூபிக்கும். மேலும் கிழத்தன்மையினுங்கூட தேஹவன்மை மாறுமலும் ரோகங்களால் கெடுதிபெறுமலும் மற்றும் அவ்வயதுக்கேற்ற விகாரங்களால் பீடிக்கப்படாமலும் இருக்கக்கூடிய உபாயங்களையும் போதிக்கும்.

வாஜீகரண தந்த்ரம்.

எவருக்கு சுக்லம் அற்பமாகவும், தோஷங்களுடன் கூடியதாகவும், சுஷ்கம் அல்லது க்ஷீணமாகவும் இருக்கின்றதோ அவர்களுக்கு அந்தந்த தோஷங்களைப் போக்கி ஆரோக்யத்தை யுண்டாக்குவதற்கும், சரீரத்திற்கு புஷ்டி வலிவு இவை முதலியவைகளை யுண்டாக்குவதற்கும் தகுந்த வழிகளை இந்த பிரகாணம் கூறுகின்றது.

ஆயுர்வேதம் தொடர்ந்து வந்த விதம்.

அகாதியான ருக்வேதம் முதலியவைகளுடன் உதித்த ஆயுர்வேதத்தை பிரம்மா, தக்ஷப்ரஜாபதி, அச்விநீதேவதைகள், தன்வந்திரி, இந்திரன் முதலான தேவர்களும், ஆத்ரேயர், நிமி, காச்யபர், அக்னிவேசர், பேடர், ஜாதுகர்ணர், பராசரர், ஹாரீதர், க்ஷாரபாணி முதலிய இருஷிச்ரேஷ்டர்களும் வைதிகமஹாயுகத்திலேயே தமது பெயர்களுடன் கூடியவையான ஸம்ஹிதைகளை இயற்றி சாத்காலத்து சந்திரனைப்போல் பிரகாசிக்குமாறு செழிக்கச் செய்தனர். பிறகு ஆத்ரேயர் அக்னிவேசர் இவர்களது கொள்கையை அனுஸரித்த சரகாசாரியரால் காயசிகித்ஸாபிரதானமான தந்த்ரமும், தன்வந்தரி ஔபதேநவர்களுடைய மதத்தைப் பின்பற்றிய ஸுச்ருதாசாரியரால் 'சல்யதந்த்ரமும், விதேஹரென்பவரால் சாலாக்யதந்த்ரமும், நாகார்ஜுனன் முதலியவர்களால் இரஸதந்த்ரமும் இயற்றப்பட்டு, இவ்வைத்தியமுறை கிருஸ்து சகாப்தத்தினும் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னமே நன்கு விருத்தியடைந்திருந்தது. (தொடரும்.)

---

## HYGIENE.

### ஆரோக்ய முறை.

BY
DR. M. MANICKAM,
Physician and Surgeon.

ஆரோக்யம் என்னும் பெயரினாலேயே இவ்விஷயம் முக்கியமாய் ஜனங்களுடைய தேஹஸௌக்யத்தைத் தெரிவிக்கு மென்றறியலாம். ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை இளமைப்பருவமுதல் முதிர்ச்சி பெறும் வரை

---

* ஸர்ப்பம் முதலிய பிராணிகளின் விஷம் பிராணிஜமென்றும், வத்ஸநாபிமுதலிய மூலிகைகளின் விஷம் ஔத்பிதமென்றும், விஷகுணமற்ற ஸாதாரண பதார்த்தங்களை ஒன்றுடன் ஒன்று சேர்ப்பதாலுண்டாகும் விஷம் கிருத்ரிமமென்றும் அறிக.

யில் கவனிக்க வேண்டியிருந்தும் நம்மவரில் பெரும்பான்மையோர் இவ்விஷயத்தில் அஜாக்கிரதையா யிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் இந்த சாஸ்திரத்தை யாவரும் முக்கிய மென்று கவனித்து உபயோகத்திற்குக் கொண்டு வராமலிருப்பதே.

இந்தியாவில் முற்காலத்தில் பெரும்பாலோர் நன்கு கல்விகற்று வந்தனர். அக்காலத்தில் புருஷர்கள்மட்டுமேயல்ல ஸ்திரீகளும் படிப்பில் மிக விருத்தியடைந்தவர்களாயிருந்தபடியால் ஆரோக்யமார்க்கமும் யாவராலும் அனுஸரிக்கப்பட்டு அவ்வழி அபிவிருத்தி யடைந்து வந்தது; அதாவது மகம்மதிய ஆளுகைக்கு முன் இந்து மன்னர்களின் ஆட்சியில் ஜனங்களுக்கு இந்த சாஸ்திரமார்க்கம் விசேஷமாய் அனுஷ்டானத்திற்கு வந்துகொண்டிருந்தது. தஞ்ஜாவூர் மஹாராஜாக்களின் ஆளுகையில் பலவிடங்களிலும் சுத்தஜல முபயோகிப்பதற்காகக் குளங்களும் கிணறுகளும் வெட்டப்பட்டும், அவை நன்கு சுத்தமாயிருக்கும் வண்ணம் கவனிக்கப்பட்டும் வந்தது. சில காலங்களானபின் இவ்வழி அனுஸரிக்கப்படாமல் ஆரோக்யக்குறைவினால் ஜனங்கள் தெரியாமல் கஷ்டத்திற்குள்ளானார்கள்.

இப்பொழுது நமது மாட்சிமை பொருந்திய ஆங்கிலேயரின் அரசாட்சியில் முன் க்ஷீணதசை யடைந்துவந்த ஆரோக்யசாஸ்திரமானது நமது அத்ருஷ்டவசத்தினால் நற்கதி யடைந்துவரத் தொடங்கியது. இந்த சாஸ்திரத்தை ஆங்கிலவைத்தியபாடசாலைகளில் படிக்கும் விஷயங்களில் ஒரு பாகமாக ஏற்படுத்தி, வைத்தியபரீக்ஷைகளிலும் இதை ஒரு முக்யாம்சமாக வைத்திருப்பதினால் நாளுக்கு நாள் இச்சாஸ்திரம் அபிவிருத்தியடைந்து இந்தியநாட்டிலும் எங்கும் பரவி உபயோகத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. ஆங்கில நாட்டிலே இதை முக்கியமான பாடமாய் ஏற்படுத்தி, அனுபவமுறைப்படி ஸர்வகலாசாலைகளில் மாணாக்கருக்குக் கற்பித்து, இந்த பிரத்யேகவிஷயத்தில் பரீக்ஷையில் தேறியவர்களுக்கு B. Hy என்றும் D. Hy. என்றும் பட்டங்களும் அளிக்கப்படுகின்றன. எண்ணிறந்த ஆங்கிலேயரும் நமது இந்துக்களும் இப்பரீக்ஷைகளில் தேறி இந்தியநாட்டுக்கும்வந்து அங்கங்கே ஆரோக்யமுறைகளைக் காக்கும் (Health Officer) அதிகாரத்தை வஹித்து, அனேகமாயிரம் ஜனங்களுடைய தேஹஸௌக்கியத்தை விருத்திசெய்து வருவது நமது காருண்ய கவர்ன்மெண்டாரின் ஆதரவாலேயே என்பதை எல்லோரும் நன்றாய் அறிந்திருக்கின்றனர். ஆனாலும் நமது தேசத்தில் ஆரோக்யநிலைமை பூர்ணமாய் ஏற்படாமலே இன்னும் இளமைப்பருவத்திலேயே இருந்து வருவதாகக் கருதவேண்டியிருக்கிறது. இருபது அல்லது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் இருந்த விதத்தைவிட இப்பொழுதுள்ள ஆரோக்யமுறையின் நிலைமை 'எறும்பூறக் கல்லுந்தேயும்' என்கிறபடி சிறிது பழக்கத்திற்கு வந்து நற்குணம் தந்துவருகின்றது. முன்னால் இச்சென்னை நகரத்தில் அனேக வியாதிகள் விருத்தியடைந்து ஜனங்கள் மிகவும் வருந்தியதைப்பற்றி அனேகர் கேள்வியுற்றிருக்கலாம். யானைக்கால், அண்டவ்ருத்தி, நரம்புச் சிலந்தி இவைகளும் இன்னும் இவற்றைப்போன்ற வேறு சில ரோகங்களும் அப்பொழுது ஜனங்களைப் பிடித்ததற்குக் கிணற்று நீரை விசேஷமாய் உட்கொண்டு வந்ததே முக்கிய காரணமாம். இப்பொழுது புழலேறியிலிருந்து சுத்தமான குடிநீரை எல்லா விதிகளிலும் விடுகளிலும் கொண்டு வந்து சேர்த்து எல்லோருக்கும் நல்ல குடிநீர் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் பட்டணத்தில் கழியும் சாக்கடை நீரையெல்லாம் வடிகாலேற்படுத்தி ஊருக்கு வெளியில் வெகு தூரத்தில் கொண்டு போய் புல் முதலானவற்றிற்குப் பாய்ச்சி அக்கழிவு ஜலம் பட்டணத்திற்குள் தங்காமலிருக்கும்படியும் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றால் முன்னிருந்த யானைக்கால் முதலிய ரோகங்கள் இப்பொழுது ஜனங்களுக்கு விசேஷமாய் வருவதில்லை. இப்படியே இன்னும் அனேக பட்டணங்களிலும் இவ்வித ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் இனியும் செய்ய உத்தேசித்து வருகிறார்கள். அம்மாதிரி சீர்திருத்தப்பட்ட இடங்களுள் மைசூர் இராஜ்யத்தைச் சேர்ந்த பெங்களூருமொன்று. இங்கு முதலில் சுத்த ஜலவஸதியில்லாமல் நூறுமுழங்களமுள்ள கயிறுகளைக் கட்டினாலும் போதாமலிருந்த அவ்வளவு மஹா அகாதமான கிணறுகளிலிருந்து ஜலம் எடுக்க வேண்டியிருந்ததால் ஜனங்கள் வெகு நாள் வரையில் அதிக கஷ்டப்பட்டார்கள். அப்படியும் அனேக இடங்களில் அவ்வளவு ஆழமான கிணறுகளிலுங்கூட ஜலம் கிடைக்காமலிருந்ததுண்டு. இப்பொழுது அவ்விடத்தில் ஊருக்கு வெகு தூரத்தில் ஒரு பெரிய ஏரியில் ஜலத்தைச் சேர்த்து இரண்டு எஞ்ஜின்கள் வைத்து பெங்களூர் முழுமைக்கும் குழாய்மூலமாய் ஜலத்தைக்கொண்டு போய் ஜனங்கள் உபயோகிக்குமாறுச் செய்து வருகிறார்கள்.

முன்னால் மல ஜலாதிகளுக்கென்று தகுந்த இடத்தை ஏற்படுத்திக்கொள்ளாமலும், அவற்றை வெளிப்படுத்த வேண்டிய வழிகளைத் தேடாமலும், வீட்டிற்கு அருகில் ஏதேனும் பள்ளங்களில் மல ஜலாதிகளைச் சேர்த்து வைத்து அவற்றிலிருந்துண்டாகும் துஷ்டவாயுவின் ஸம்பந்தத்தினாலும் அளவற்ற வியாதிகளை ஜனங்கள் அனுபவித்து வந்தார்கள். இப்பொழுது அப்படியில்லாமல் இதற்குத் தகுந்த இடமும், தினந்தோறும் இரண்டு மூன்று தடவை இம்மலம் முதலியதை வெளியிற் கொண்டுபோய் விடுவதற்குத் தோட்டிகளும் ஏற்படுத்தப்பட்டு ஜனங்களின் ஆரோக்யம் ஒருவாறு காக்கப்பட்டுவருகிறது. ஜனங்கள் அதிகரித்து வருவதால் அவர்கள் உபயோகிப்பதற்காக அனேக புது இடங்களை பேற்பாடு செய்து நல்ல காற்று சுத்தஜலம் முதலியது கிடைக்குமாறு இராஜாங்கத்தார் பல சீர்திருத்தங்கள் செய்து வருகிறார்கள். சில விடங்களில் பூமிக்குள் குழாயை விட்டுத் துளைத்து வெகு ஆழத்திலிருந்து நல்ல ஜலம் அக்குழாய் மூலமாகவே வரும்படியும், அதை ஜனங்கள் உபயோகிக்குமாறும் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆரோக்யமுறை இன்னும் சீர்திருத்தமடைய வேண்டுமானால் புருஷர்களைப் போல் இத்தேசத்திய ஸ்த்ரீகளுக்கும் படிப்பு அவசியமானது. நமது தேசத்து ஸ்க்ரீகளுக்குப் படிப்பு விருத்தியாகாத வரையில் ஆரோக்ய முறையும் சீர்படுவது கஷ்டம். ஒவ்வொரு பிராணிக்கும் நல்ல காற்று, நல்ல குடிஜலம், நல்ல உணவு இவை வெகு முக்கியமானவை. இவ்விஷயங்களையெல்லாம் தமிழ்முதலிய தேசபாஷைகளில் எழுதி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஆண் பெண்களடங்க எல்லா மாணக்கருக்கும் கற்பிக்க வேண்டியது அவசியம். ஒவ்வொரு பெண்ணும் இளமையில் ஆரோக்யமுறைகளைப் படித்து விஷயமறிந்தவர்களாயிருந்தால், யுக்தவயது வந்ததும் தங்களுடையவும் தமது குழந்தைகளுடையவும் கணவனுடையவும் ஆரோக்யங்களைக் காப்பதுடன், தமது வீட்டையும் ஆடைமுதலிய மற்றவைகளையும் வெகு சுத்தமாய் வைத்துக்கொண்டு அனேக ரோகங்

களிடமிருந்து தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் தப்பி வைப்பார்கள். நகரங்களிலாவது படிக்கத்தெரிந்தவர் பலருண்டு. கிராமாந்தரங்களிலோ புருஷர்களிலேயே படித்தவர் சராசரி 100-க்கு 5 பேர் தேறுவது கஷ்டம். ஆகையால் கிராமாந்தரங்களிலும் ஒவ்வொரு ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் சிறு வயதில் கட்டாயம் படித்தாகவேண்டுமென்று நிபந்தனை ஒன்று ஏற்படுத்தினால் அப்பொழுதுதான் மேற் சொல்லிய ஆரோக்ய முறை சீர்திருத்தமடைய வழியேற்படும்.

இதுவரையில் ஆரோக்யவிஷயத்தைப் பொதுவாகக் கூறிவந்தோம். இப்பொழுது ஆரோக்யத்துக்கு வேண்டிய விஷயங்களைப் பற்றிச் சிறிது விவரமாகக் கூறுவோம். ஜீவ கோடிகளுக்கு பிராணாதாரமானவை நல்ல காற்று, நல்ல ஜலம், சூரியவெளிச்சம் முதலியவை. நாம் உபயோகிக்கும் காற்றானது பிராணவாயு(Oxygen), இலவணவாயு (Nitrogen), கரியமிலவாயு (Carbonic acid gas) என்கிற சில வாயுவிசேஷங்களின் சேர்க்கையினாலுண்டானது. பிராணவாயு மிகவும் முக்கியமாய் பிராணிகளுக்கு வேண்டியிருப்பதால் அது 100 பங்கு வாயுவில் 79 பாகமாகவும், இலவணவாயு 21 பாகமாகவும் சேர்ந்திருக்கின்றன. கரியமிலவாயு 1000 பாகம் ஆகாயத்தில் 4 பாகமாக வெகு ஸ்வல்பமாகச் சேர்ந்திருக்கிறது. ஜனங்களுக்கு இந்த வாயு அவ்வளவாய் உபயோகமாக இல்லாவிட்டாலும் செடி கொடி முதலியவற்றிற்கு முக்கியமானதாயிருக்கிறது. ஜல ஆவி என்னும் ஒருவித காற்றும் (Watery Vapour) ஆகாயத்தில் சேர்ந்திருக்கிறது. இந்த வாயு உஷ்ணத்தினால் மிகவும் விசாலிக்கும் (Expansion) தன்மையது. இதனால் பிராணவாயுவானது ஆகாயத்தில் இருக்கவேண்டிய அளவிற் குறைந்து விடுகின்றது. குளிர்ந்தகாலங்களில் பிராணவாயு இருக்கவேண்டிய அளவை விட அதிகப்படும். இவ்வித மாறுதலால்தான் உஷ்ணதேசத்தில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் வலிவற்று, உத்ஸாஹமின்றி, அனேகவித சரீரமாறுபாடுகளை அடைந்துவிடுகிறார்கள். இதற்கு மாறாக சீதளமான தேசங்களில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் உத்ஸாஹத்துடனும், தேஹவலிமையுடனும், திடமான மனத்துடனும் நெடுங்காலம் ஜீவித்திருக்கக் கூடியவராகிறார்கள். இம்மாதிரி பிராணவாயு என்னும் ஆக்ஸிஜன் குறைவுபடுவதால் ஜனங்களின் தேஹவலிவு குறைந்து, அதனால் வாழ்நாளும் குன்றி விடுகின்றதென்பதை எல்லோரும் நன்கு அறிவது மிகவும் அவசியமான விஷயம். ஸமுத்திரமட்டத்திற்கு மேல் உயர்வான இடங்களில் — அதாவது மலைபிரதேசங்கள் முதலிய மேடான பூமிகளில் வசிப்பவர்கள் உட்கொள்ளும் காற்று மிகக் குறைந்திருந்தாலும் அங்கு ச்வாஸாசயங்கள் (Lungs) வாயுவை அடிக்கடி உட்கொள்ளுவதற்கு வேண்டிய சக்தியை மிகுதியாகப் பெறுவதால், ஆகாயத்தில் பிராணவாயு குறைந்திருப்பதாகத் தோற்றுவதில்லை. இதே காரணத்தினால்தான் ச்வாஸாசயத்தைப் பற்றிய க்ஷயரோகம் முதலியவற்றால் பீடிக்கப் படுபவருக்கு மேட்டுப்பாங்கான பெல்லாரி, திருக்கழுக்குன்றம் இவை போன்ற இடங்கள் ஆரோக்யமடைவதற்கு மிகவும் தகுந்தவைகளென்று கருதப்படுகின்றன. நீராவி யெனத்தகும் ஜலவாயுவானது (Hydrogen) காலம், இடம் முதலியவற்றின் மாதிரிகளுக்கு ஏற்றவிதமாய் அனேகவித வேற்றுமையை அடையும். ஸமுத்திரதீரங்களிலும், பெரிய மடு, ஆறு, ஏறிகள் முதலியவற்றின் ஸமீபங்களிலும் இந்த வாயு அதிகமாகப் பெருகி ஆகாயத்தில் கலந்து வருகி

றது. இதற்குத் திருஷ்டாந்தமாக, காற்று மழை அடிக்க ஆரம்பிப்பதற்கு முன் வீசும் வாயுவானது எவ்வளவு குளிர்ந்ததாயிருக்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

நாம் உட்கொள்ளும் சுத்தமான வாயுவை அசுத்தமாக மாற்றும் வஸ்துக்கள் அநேகம் உண்டு. அவைகளுள் முக்கியமான சிலவற்றைக் கூறுவோம்:—

(1) கரியமிலவாயு (Carbonic acid gas), நவாசாரவாயு(Ammonia), கந்தகஸமமான ஓர் வாயு ($H_2 S$), செடி கொடி முதலியவை அழுகிப்போவதாலுண்டாகும் சில வாயுக்கள் முதலியன. (2) கண்களுக்குப் புலப்படாத அநேக வகையான சிறு கிருமிகள் (Germs and other minute living bodies), (3) பார்த்திவஸம்பந்தமான தும்பு தூசுகள் (Earthy matters), சிறு மயிர்த்துண்டுகள், நூல் வஸ்திரம் முதலானவைகளின் நுண்ணிய பாகங்கள், இன்னும் இவைபோன்ற வேறு அநேக பதார்த்தங்களுமாம்.

இவற்றுள் விசேஷமாகக் கெடுதி செய்யக்கூடியது கரியமிலவாயுவே. கட்டை முதலியதை எரிப்பதாலும், நிலக்கரி வாயுவை (Coal gas) உண்டாக்குவதாலும், இயந்திரங்கள் வேலை செய்வதாலும், ஆடு மாடு முதலியவைகளின் கூட்டங்களாலும், பதார்த்தங்கள் பதனழிந்து அழுகுவதாலும் இவ்வாயு உற்பத்தியாகின்றது. மற்ற வாயுக்களைவிட இதற்கு பாரம் அதிகம். ஆகையினாலேயே பூமிக்குமேல் அதை அடுத்தாற்போல் கீழே அதிகமாக இவ்வாயு சேர்ந்திருப்பதா யறியப்படுகின்றது. ஆதலால் இவ்வாயுவானது உபயோகமில்லாத பாழுங்கிணறுகளிலும், குகைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் அடைந்துக் கிடக்கின்றது. மிகவும் ஜனங்கள் நெருங்கிய இடங்களிலும், விளக்குகள் எரியுமிடத்திலும், புகைக்கூடுகளிலும் இவ்வாயு விசேஷமாய் உற்பத்தியாய் ஜனங்களின் ஸௌக்கியத்திற்கு இடையூறு செய்கிறது. நவாசாரவாயுவானது (Ammonia) பிராணிகள் இறந்து அவற்றின் உடல் அழுகுங் காலத்தில் உண்டாகிறது. சாக்கடைக்கால் சேர்ந்து நிற்குமிடங்கள், குதிரைலாயங்கள், மாட்டுத்தொழுவம் இவைகளிலும் நவாசாரவாயு உற்பத்தியாகிறது. மனிதருக்குத் தீங்கு விளைவிக்கும் பல இதர வாயுக்கள் கைத்தொழில் செய்யும் அநேக இடங்களிலிருந்தும், முக்கியமாய் நீலிச்சாயம் தோய்க்கும் பானைகளிலும், அந்த மருந்தைக் காய்ச்சும் தொட்டிகளிலும், தோல்களைப் பதனிடும் கிடங்குகளிலும் உண்டாகின்றன.

காற்றில் தங்கி வசிக்கும் அநேக வகையான கிருமிகளுண்டு. அவை கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு நுண்ணியவையென்றாலும், அவைகள் மனிதகோடிக்கு ஜன்ம சத்ருக்களாகவும், கொலையாளிகளாகவும் ஏற்படுகின்றன. அவற்றை மைக்ரஸ்கோப் என்னும் பூதக்கண்ணாடியின் ஸஹாயத்தினால் நன்றாகக் காணலாம். மஹாஸூக்ஷ்மமான இக்கிருமிகள் ஆகாயத்தில் மண் தூசு முதலானவைகளோடு கலந்து எங்கும் பரவிவரும். காய் கறி பதார்த்தங்களாவது மாம்ஸங்களாவது அழுகிப்போகுமிடத்து இக்கிருமிகள் காற்றுடன் கலந்து அவ்விடங்களில் கோடிக்கணக்காக விருத்தியடையும். இவை எவ்வளவு விருத்தியாகிறதோ மனிதருக்குக் கெடுதியும் அவ்வளவு அதிகமாவதாகக் கருதவேண்டும். இவற்றில் சில பதனழியும் காய் கறி முதலியவற்றிலிருந்தும், சில மாம்ஸங்களிலிருந்தும் உண்டாகின்றன. சிறிது உஷ்ணமும் குளிரும் சேர்ந்த நிலைமையில் இவை விருத்தியடையும். கேவலம் குளிர்காலத்தில் இவை குறைவுபட்டு வரும். மனிதருக்கு உடம்பில் நல்ல வலிவும்

இரத்தவிருத்தியும் இருக்கும் வரையில் இந்த கிருமிகள் தேஹத்தினுள் புகுந்து கெடுதி செய்ய சத்தியற்றவைகளாகும். வலிவும் குறைந்து இரத்தபுஷ்டியும் இல்லாவிட்டால் இவ்வ தேஹத்தில் புகுந்து பல ரோகங்களை உண்டாக்கி பிராணுபாயங்களை விளைவிக்கும் சக்தியுடைய வைகளாயிருக்கின்றன. மேலும் மனிதருக்கு உபயோகமாயுள்ள மிருக பக்ஷி முதலானவற்றிற்கும் கெடுதியுண்டுபண்ணும் சக்தி இக்கிருமிகளுக்கு அபாரமாயுண்டு. இவை ஜீவசரீரங்களில் புகுந்து அங்குள்ள தாதுக்களின் அம்சங்களைக் கெடுத்து, தனித் தனியாக அவ்வவயவங்களைப் பிரித்து உரு மாற்றி உபயோகமற்றவைகளாகச் செய்கின் றன. இவைகளுடைய இவ்விதமான செயல் களால் காலரா என்னும் வாந்திபேதி, விஷ ஜ்வரம், சீதபேதி, க்ஷயரோகம், நியுமோனியா என்னும் ச்வாஸாசயத்தைப்பற்றிய கபஜ்வரம், ஸந்நிபாத ஜ்வரம், மஞ்சள் ஜ்வரம், தாளக்கட்டு வியாதி (Lock-jaw), தொண்டையடைப்பு நோய் முதலியவையுண்டாகும். இவ்விதமே ஜலத்திலும் உணவுகளிலும் பலவித தோஷங் கள் வந்தடைகின்றன. ஆகையால் எப்பொழு தும் வாயு, ஜலம், ஆஹாரம் இவை வெகு சுத்த மாக இருக்கும்படி ஊக்கத்துடன் ஒவ்வொரு வரும் கவனித்துவருவது மிகவும் அவசியம். ஆரோக்யவிஷயங்களைப் பற்றி இன்னும் அனேக அம்சங்களை வரப்போகும் ஸஞ்சிகை களில் எழுதுவோம்.

---

## THE POISON OF SCORPION.
## தேள் விஷம்.

BY

MR. T. NARAYANA NAMBI.

தேள் கொட்டினல் அப்பொழுதுண்டாகும் வேதனை ஸஹிக்கக் கூடாமலிருப்பது அனே வராலும் அறியப்பட்ட விஷயம். ஸாப் பம் முதலியது கடிப்பது மிகவும் அபாய கரமானதாயிருந்தும் அவற்றால் இவ்வளவு வலியும் வேதனையும் கிடையாது. இவ்வளவு க்ரூர ஜந்துவின் விஷத்திற்குத் தகுந்த சிகித் ஸையைப்பற்றி எவரேனும் விசேஷமான விசாரம் செய்ததாகவும் அறியப்படவில்லை. ஆகையால் இதற்காக என்னுடைய அநு பவத்தில் வந்தவையும், பல அறிஞர்களால் பரீக்ஷிக்கப்பட்டவையுமான சில சிகித்ஸை களை இங்கு ஜனங்களின் நன்மையைக் கருதி எழுதுகின்றேன்:—

பித்தப்ரக்ருதியான (Bilious temperament) மனிதருக்கு இத்தேள் விஷம் வெகு கஷ்டத்தைக் கொடுக்கும். இவ்வித தேஹக் கூறுள்ளவரில் சிலர் தேள் கொட்டியதும் சில நிமிஷத்தில் மூர்ச்சையடைவர். தேஹபலத் திற்கும் விஷத்திற்கும் யாதொரு ஸம்பந்தமு மில்லை. எவ்வளவு சக்தியுள்ளவனுயிருந்தா லும் பித்தப்ரக்ருதியாக இருந்தால் தேள் கொட்டியதும் நிலத்தில் விழுந்து புரள வேண்டிவரும். தேள் கொட்டுவதாலும் கட் டெறும்பு கடிப்பதாலும் உண்டாகும் இரு வித வேதனைகளையும் ஒரே மாதிரியாகக் கரு தும் சுபாவமுடையவருமுண்டு. இவர் களுடைய சரீரத்தைத் தைவம் அத்தன் மையதாக ஸ்ருஷ்டித்திருக்கின்றதென்பதைத் தவிர்த்து வேறொன்றும் சொல்லக்கூடவில்லை. தேள் கொட்டியதின் காரணமாக மாண்டு போன சிலருமுண்டென்று நான் அறிகி றேன். நெல்லூர் ஜில்லாவில் ஒரு வகையான விஷத்தேளுண்டு. அவ்வூரில் ஒரு பெண் தேள் கொட்டியதால் இறந்து விட்டது எனக்குத் தெரியும். பாவம், அப்பெண் தேள் கொட்டி யதும் ஸ்மரணை தப்பி உடனே பூமியில் விழு

ந்து அரைமணி நேரத்திற்குள்ளாகவே மரித்து விட்டாள்.

சாஸ்திர முறைகளைக் கொண்டும் அபூர்வமான சில அனுபவமுறைகளைக் கொண்டும் தேள் விஷத்தைப் போக்குவதற்கு உபாயங்களில்லாமற் போகவில்லை. மூர் என்பவர் எழுதிய வைத்திய நூலில், தோலுரித்த வெள்ளுள்ளியைக் கொட்டிய வாயில் தேய்ப்பதாலும், உப்பு ஜலத்தில் துணியை நனைத்து அதனால் அவ்விடத்தைச் சுற்றிவைப்பதாலும், பழைய புளியங்கொட்டையைக் காடிவிட்டு அரைத்து அவ்விடத்தில் தேய்ப்பதாலும், காடியையே அவ்விடத்தில் தாரையாக விழும்படி விடுவதாலும் குணமுண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும் இவற்றுள் வெள்ளுள்ளி விசேஷமாய் இதில் உபயோகமாகக் கூடியதாகத் தெரியவருகிறது. வெள்ளுள்ளியானது இவ்வேதனையைச் சிறிதேனும் தணிக்காமல் போகாது. கொட்டியவிடத்தில் காடியையும் குறிப்பாக நன்கு தாரைபோல் விழச் செய்வது நலம். கொட்டின இடத்தைக் குறிப்பிட்டு அதே இடத்தில் விடாமல், பலவிடங்களிலும் படும்படி விட்டால் காடியினால் குணம்தெரியாதெனவும் கூறுவர். தேங்காய்நார்மட்டையைச் சுட்டு அதன் புகையைக் கொட்டியவிடத்தில் படியச் செய்வதும் நலமென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த மட்டிலும் இதனால் பிரயோஜனமுண்டென்று சொல்லுவதற்கில்லை. தேள் கொட்டியவுடனே அந்த இடத்தை மிகவும் குளிர்ந்ததான ஜலத்தில் தோய்க்கலாமென்று சிலர் சொல்லும் விதமாகச் செய்வதிலும் பலனொன்றும் இருப்பதாகத் தோற்றவில்லை. மந்திரம் ஜபித்து அவ்விடத்தை மெல்லென ஊதுவதால் விஷம் இறங்கி விடுமென்று நம்மவரில் பெரும்பான்மையோருக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் மந்திரத்தில் ஸித்திபெற்றவர் நம்மவரில் அரிது. ஏதாவது மந்திரத்தின் எழுத்துக்களை மட்டும் ஒரு யாமகாலம் ஜபித்துத் தேள் கொட்டியவிடத்தை ஊதிக்கொண்டிருந்தால் சிலருக்கு ஏதோ குணமுண்டாவது போலிருக்கும். ஆயினும் மந்திரமோதாமலே ஒரு யாமகாலம் ஊதினாலும் குணம் தெரியக்கூடும். இப்படி இது வரையில் சொல்லி வந்த சிகித்ஸைகளால் எல்லோருக்குமே குணமுண்டாவதாகக் கூறுவதற்கில்லை. ஆகிலும் அனேக ஜனங்களுக்கு உபயோகித்து மேலான குணம் தந்ததாகத் தெரிய வந்த கைகண்ட மருந்தொன்று இத்தேள் விஷத்திற்குண்டு. அதாவது.—

தேள் கொட்டியவுடனே இரண்டு தேக்கரண்டியளவு ஸாதாரண உப்பை நான்கு வெற்றிலையில் வைத்து மடித்து வாயிலிட்டு நன்றாகமென்று விழுங்கிவிடவேண்டும். இதை ஸாப்பிட்டதும் பத்து நிமிஷத்திற்குள் வேதனை நீங்கி விடும். பத்து நிமிஷத்தில் குணம் தெரியாவிட்டால் மறுபடியும் உடனே முன்போல் அவ்வளவு உப்பை உட்கொள்ள வேண்டியது. இப்படிச் செய்த பின் வேதனை நிச்சயமாய் நின்றுவிடும். தேள் கொட்டியவுடனே கூடுமான சீக்கிரத்தில் தாமஸமின்றி இதைச்செய்வது உத்தமம். ஐந்து வருஷத்திற்கு முன் ஸெஞ்ஜோஸப் என்கிற ஒரு வயது முதிர்ந்த பள்ளிக்கூடத்து ஸேவகனை கொடிய விஷத் தேள் கொட்ட, அவன் ஸஹிக்கக்கூடாத வேதனையுடன் தவித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது நான் இந்த சிகித்ஸையை அவனுக்குச் செய்தேன். உடனே பத்து நிமிஷத்தில் தேள் கொட்டின அடையாளமே சிறிதும் காணப்படாமல் ஸௌக்கியமடைந்தான். என்னையே ஒரு தடவை தேள் கொட்ட, நான் பித்தப்ரக்ருதி யானதால் நோயைத்தாளக்

கூடாதவனுயிருந்தும் உப்பையும் வெற்றிலையையும் ஸாப்பிட்டேன். பத்து நிமிஷங்களில் நன்றாக வேதனை நின்றுவிட்டது. தேள் கொட்டியவுடனே கொட்டிய விடத்திற்கு மேல் ஒரு கட்டு கட்டவேண்டும். மருந்து வருவதற்குச் சிறிது ஸாவகாசமாகுமானால் அது வரையில் விஷம் ஏறுமலிருப்பதற்கு இவ்விதம் கட்டவேண்டியது அவசியம். எவ்விதமான மருந்துகளைக் கொடுத்தபோதிலும் கொட்டின வாயில் மாத்திரம் சுமார் இரண்டு மணி ஸாவகாசம் வலி இருந்து வரும்.*

---

## DISEASES AND INSECTS.

### வியாதிகளும் பூச்சிகளும்.

A LECTURE DELIVERED

BY

Dr. V. T. KORKE

சென்னை மெடிகல்காலேஜில் 'மெடிகல் க்ராஜுவேட் அஸோஸியேஷன்' என்னும் வைத்தியஸங்கத்தின் ஆதரணையின் கீழ், சென்னையில் கலா ஆஜார் என்னும் வியாதியின் தத்துவத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் கார்க் என்பவர் ஆகஸ்டுமீ 1௳ ஒரு பிரஸங்கம் செய்ய நேரிட்டது. டாக்டர் கார்க் எடின்பரோவில் இராயல் காலேஜ் ஆப் பிஸிஷன்ஸ் என்னும் வைத்தியகலாசாலையில் முதன் முதல் படிக்கப்போன இந்திய மாணுக்கராவர். இங்கிலந்திலுள்ள லிவர்பூல்நகரத்தில் உஷ்ண தேசங்களுக்கு ஏற்ற ஔஷதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வித்யாசாலையில் வித்யார்த்தி வேத்நம் பெற்று, அங்குள்ள வைத்திய வித்வான்களுடன் சேர்ந்து அப்பாடசாலையை நடத்தி வந்தவர். அவ்விடத்தில் பாக்ட்ரியாலஜி, பயோகெமிஸ்ட்ரி முதலான சாஸ்திரங்களைக் கற்பிக்க அதிகாரம் பெற்றவர் இவர் அங்கு ஸ்லீபிங்டிஸீஸ் என்னும் ஸுஷுப்தி வியாதியைப் (தூங்கும் வியாதியை) பற்றி விசாரம் செய்தவர். பிறகு, ஸர் ரோனல்ட் ராஸ் என்பவரின் மேற்பார்வையில் ஆராய்ச்சி வேலையில் பிரத்யக்ஷானுபவம் அடைந்தவர் வயதிலும் வெகு சிறியவர்.

அவருடைய உபந்யாஸத்தின் வரலாறு:— வியாதிகளைப் பரவச்செய்யும் பூச்சிகள் 3-வகுப்பானவை. (1) கொசுக்களின் வகுப்பு, (2) ஈக்களின் வகுப்பு, (3) உண்ணி முதலானவற்றின் வகுப்பு. இங்கு கொசுக்களைப்பற்றி விவரிக்கப்படுகிறது. கொசுக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆண்டெனீ (Antennea) என்னும் கொம்புபோன்ற இந்த்ரியம் மனிதருக்கில்லை. மிருகம் மனிதர் பக்ஷிமுதலியவை கண்ஜாடை முதலானதைக்கொண்டு அவற்றின் நோக்கங்களை அறிவிப்பதற்கு வகையிருப்பதுபோல் கொசுக்களுக்கு இருப்பதாக நன்கறியப்படவில்லை. ஆனால் அவ்விதம் அறிவிப்பதற்கு ஏதோ ஒரு வகையானஜாடை இருக்கத்தான் வேண்டும். அவற்றிற்கு யோசிக்க வேண்டிய சக்தியும் ஒருவகையான அறிவும் உண்டென்று மட்டும் ஊஹிக்க வேண்டியிருக்கிறது. இதுகள் சதுப்பான பூமியிலும் ஆற்றோரங்களிலும் சூனியமான இடங்களிலும் வளர்ந்து வருவதுடன் அழுகிப்பதன் கெட்ட பதார்த்தங்களைத் தின்றுப் பிழைக்கும் வழக்கமுமுள்ளவை. எப்பொழுதும் நீர்நிலையான இடத்திலேயே இருந்து வளர்ந்து வருவதை நோக்கி இவை நீர்வாழும் ஜீவனகளாகவும் கருதப்படலாம்.

இவற்றை நிலத்திலுள்ளவை, உப்புநீரிலுள்ளவை, சுத்த ஜலத்திலுள்ளவை என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். நான்காவது

---

* தன்வந்தரி யென்னும் வைத்திய பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

வகையான மிர்மிகோபிலஸ் (Myrmecophilous) என்கிற குளவியைப் போன்ற ஜந்துவானது பூமியிலே நடமாடுந்தன்மையது. இவ்வித ஜந்து எறும்புப் புற்றிலுள்ளவைகளைத் தின்றுப் பிழைக்குமியல்புடையன. பறக்கும் போது இறகுகளை நன்றாக மூடிக்கொண்டேதான் பறக்கும். இவ்வகையான பூச்சிகள் மனிதருடைய சர்மத்தில் வேதனையைத் தரக்கூடிய ஒருவித திரவத்தைக் கக்குகின்றன. நாம் வீட்டிலுள்ள ஆடு மாடு முதலிய ஜந்துக்களை விலக்கிவிட்டுப் பார்த்தால், பிறகு நம்முடன் பலவிதத்திலும் கலந்து வாழும் பிராணிகள் இப்பூச்சிகளைத் தவிர்த்து வேறெதுவுமில்லை. இவற்றுள் சில பூச்சிகள் தேன், தேன்மெழுக்கு இவற்றையும், வேறு சில பட்டு முதலான வஸ்துக்களையும் உண்டாக்குவதால் நமக்கு இவை சில விஷயத்தில் உபயோகமுள்ளவைகளாம். பூச்சிகளாலுண்டாகும் வஸ்துக்கள் தேவையில்லாதவர் வெகு சிறுபான்மையரே. ஆனாலும் இதுகள் விவஸாயிகளுக்கும் வேறு சிலருக்கும் சில நஷ்டங்களை விளைவிப்பதுமல்லாமல், மனிதருக்கு வியாதியை உண்டாக்குவதற்கும் இவையே முதற் காரணமாகின்றன. என்று இவ்விதம் கூறிவிட்டுக் கடைசியில் கொசுக்களின் இனத்தைச் சார்ந்த சில பூச்சிகளின் சுபாவத்தைப்பற்றித் திரையின் மூலமாய் சுமார் இருபது பிரதிமைகளை லாண்டரன் ஸ்லேட்ஸ் (Lantern Slides) என்னும் கருவிகளைக்கொண்டு வந்திருந்தவருக்கு விஷயங்களை விளங்கச் செய்தார். அக்கருவிகளில் முக்கியமானவை எவையெனில் :—

டாக்டர் லெவரன், ஸர் பாட்ரிக் மான்ஸன், ஸர் ரோனல்ட் ராஸ் என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை. இக்கல்விமான்களுள் முதலிற் சொல்லப்பட்டவர், ப்ரோடோ ஸோவா என்னும் மூலப்ராக்ருதி வஸ்து ஒன்று உண்டென்றும், அதற்கு மனிதரிடம் கவரும் சக்தி உண்டென்றும் கண்டறிந்தவர். இரண்டாவது சொல்லப்பட்டவர் இதைப்பற்றிய அனேக தத்துவங்களை ஆராய்ச்சி செய்தவர். மூன்றாமவர் இந்த ப்ரோடோ ஸோவாவை கொசுக்களே முக்கியமாய் மனிதரிடம்கொண்டு சேர்க்கின்றன வென்று கண்டறிந்தார். இன்னும் சிலர் கண்டுபிடித்த இப்படிப்பட்ட சில கருவிகளைக்கொண்டு ரோகங்களை யுண்டாக்கும் பல ஜாதி கொசுக்களின் சரீரக்கூறுபாடுகளை விளக்கக்கூடிய படங்களைக் காட்டினார். இக்கொசுக்களின் ஜாதிகளாவன:—(1) அனோபிலிஸ் (Anopheles), (2) க்யுலெக்ஸ் (Culex), ஸ்டெகோமியா (Stegomyia). இக்கொசுக்களின் பல வகையான நடக்கைகள், பழக்கம், அவைகள் கடிக்குந்தன்மை, கடிக்கும் வேளை இவற்றைப்பற்றியெல்லாம் விவரித்துக் கூறினார். மலேரியா என்னும் முறைக்காய்ச்சல், யானைக்கால், எல்லோ பீவர் என்னும் பித்த ஜ்வரம் இவற்றைப்பற்றி வைத்தியசாஸ்திர நிபுணர்கள் இது வரையில் ஆராய்ச்சி செய்ததில், மேற்கூறிய கொசுக்களே இந்த ரோகங்களுக்குக் காரணமான விஷங்களை மனிதருடைய தேஹங்களில் கொண்டுவந்து உட்செலுத்துகின்றன. என்று சொல்லி பிரஸங்கத்தை முடித்தார்.

நமது சுதேச வைத்தியர்களில் எவரேனும் இவ்விதமான ஆராய்ச்சி செய்பவராவது அல்லது செய்வதில் ஊக்கமுள்ளவராவதுண்டா?

## RURAL WATER SUPPLIES.

கிராமங்களில் நல்ல ஜலம் கிடைக்கச் செய்வது.

சென்னைக் கவர்ன்மெண்டார், கிராமாந்தரங்களில் ஜனங்கள் பானம் பண்ணும் ஜலம் காலரா முதலிய தொத்து வியாதிகளுக்குத்

காரணமான தோஷங்களால் அல்லது வேறு எந்த வகையினாலாவது கெட்டுப்போகாமல் சுத்தமாயிருப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வதற்கென்று வருஷம் ஒன்றுக்கு 5 லக்ஷம் ரூபாய் செலவு செய்யத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். கிணறுகளைத் தூரெடுத்து நன்கு சுத்திசெய்து அவற்றை மூடிவைக்கவும், வெளியிலுள்ள அசுத்த நீர்கள் கிணற்றுக்குள் பொசியாமலிருக்கக் கிணற்றின் உட்புறங்களையும் சுவர் முதலியவற்றையும் சுண்ணாம்பிட்டுக் காரைபோடவும், கிணற்றிலிருந்து ஜலத்தை இறைப்பதற்குப் பம்புகளை அமைக்கவும் கவர்ன்மெண்டார் யோசித்திருக்கிறார்கள். அவ்வித கிணறுகளிலிருந்து ஜலத்தை உபயோகிப்பதில் ஜனங்களுக்குள்ள ஸௌகர்யம் இரண்டுண்டு. ஒன்று கயிறு கட்டி ஆழத்திலிருந்து நீரேந்தும் கஷ்டம் நீங்குவது, இரண்டாவது அக்கயிறுகளிலும் பாத்திரங்களிலும் சேர்ந்திருக்கும் அழுக்கு முதலானவை கிணற்றில் சேராமல் ஜலம் சுத்தமாயிருத்தல். இதற்காகக் கவர்ன்மெண்டார் வேண்டிய பம்புகளை வரவழைத்திருக்கிறார்கள். செங்கற்பட்டு, நெல்லூர், சிற்றூர், வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம் இந்த ஜில்லாக்களிலுள்ள டிஸ்ட்ரிக்ட் போர்டார் மூலமாய் நியமிக்கப்படும் ஸமர்த்தரான ஏஜெண்டுகளை சிறிய முனாஸிபாலிடிகளிலும் கிராமங்களிலும் அனுப்பி இப்புதிய ஏற்பாட்டை நிறைவேற்ற, தற்காலம் அத்தொகையிலிருந்து 15000 ரூபாய் செலவு செய்வதற்கு நிச்சயித்திருக்கிறார்கள். இதனால் உண்டாகும் உபயோகங்களை அறிந்துகொண்டு மிகுதியுள்ள பணத்தையும் பிறகு செலவிடுவதாய் கவர்ன்மெண்டின் யோசனை. இவ்வருஷக் கடைசியில் அங்கங்கே எத்தனைக் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்பதையும், அவற்றை ஜனங்கள் எவ்வளவு தூரம் விரும்புகிறார்கள் என்பதையும்பற்றிக் கவர்ன்மெண்டார் தங்களுக்கு அறிவிக்குமாறு டிஸ்ட்ரிக்ட் போர்டாரைக் கேட்டுவிட்டிருக்கிறார்கள். பம்புகள் வெகு காலம் உழைக்கக் கூடியவைகளாகவும், எளிதில் அமைக்கக்கூடியவையாகவும், ஸ்வல்ப செலவில் ஆகக்கூடியவையாகவும் இருக்கின்றன. ஆனால் பிராம்மணாள் முதலான சில வகுப்பாருக்கு இவ்விதம் செய்வது ஆக்ஷேபத்திற்கு இடமாகுமென்று ஸந்தேஹப்படுகிறார்கள். இவ்வித ஏற்பாடு நிறைவேறுமானால் காலரா முதலிய அனேக வியாதிகளாலுண்டாகும் கஷ்டம் பெரும்பான்மையோருக்கு நேரிடாமல் ஜனங்கள் நன்மையடைவார்கள் என்று நாம் நிச்சயமாகச் சொல்வோம். சென்னைக் கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஸானிடரி இஞ்ஜனீர் மிஸ்டர் ஹட்டன் இந்த பிரேரணையைக் கொண்டுவந்தவராதலால் இக்காரியம் கைகூடுமானால் அதனாலுண்டாகும் புகழுக்கு அவரே உரியவராவர்.

---

## THE ACTIONS OF AGATI GRANDIFLORA.

### அகத்தியின் குணங்கள்.

BY

Mr. K. S. DURAISAMI PANDITHAR,

*Native Doctor.*

மூலிகை வகைகளின் அருமை பெருமைகளை அவரவர் பல நூல்களில் கூறியிருந்தாலும், எல்லோரும் அவற்றை எளிதில் அறிந்து அவற்றினாலுண்டாகும் பயன்களை அனுபவிக்கும்படியாகத் தெரிந்தமட்டில் நமது வைத்திய கலாநிதியின் மூலமாய் வெளியிட விரும்புகிறோம்.

ஒரு ஜாதி மூலிகையில் அனேக உட்பிரிவுகளடங்கிய பலவகைப் பெயருள்ள மூலிகை

கள் இருப்பதாலும், பூமியின் ஸாரத்தினலும் சீதோஷ்ண பேதத்தாலும் மூலிகைகளின் நிறம் குறி முதலானவை பற்பல தேசங்களில் வேறு பட்டிருப்பதாலும், சில மூலிகைகள் சில விடங்களில் கிடைத்தும் சில விடங்களில் கிடைக்கக்கூடாமையாலும் அவ்வித அளவிறந்த மூலிகைகளின் பெயர்களும் குணுகுணங்களும் எல்லோருக்கும் தெரிந்திருப்பது அபூர்வம்.

ஆகையால் ஒவ்வொரு மூலிகையின் பெயரையும், அவை உற்பத்தியாகுமிடங்களையும், அவற்றின் குணவிசேஷங்களையும் அனுபவமுள்ள வைத்தியர்கள் நமது வைத்திய கலாநிதியின் மூலமாய் எழுதிவருவார்களானல் மூலிகைகளைப்பற்றிய விஷயங்களை அனேக வைத்தியர்களும் பிறரும் அறிவதற்குக் காரணமாகும்.

அகத்தியானது சிற்றகத்தி, செவ்வகத்தி, சாழைபகத்தி என மூவகைப்படும். அவை வெற்றிலைத் தோட்டங்களிலும், பூந்தோட்டம் முதலிய தகுந்த நீர்ப்பாய்ச்சலுள்ள இடங்களிலும் முக்கியமாகப் பயிராகிவருகிறது. அகத்தியிலையானது பித்தத்தையும், பித்தத்தினுலுண்டாகும் ரோகங்களையும் நிவ்ருத்தி செய்யும். புஜித்த உணவை சீக்கிரம் ஜீர்ணமாக்கும். சில தேஹிகளுக்கு மலத்தை நன்றாகக் கழியச் செய்யும். ஆடு மாடு முதலிய கால் நடைகளுக்கு வெட்கை நோயைப் போக்கி அவற்றிற்குக் குளிர்ச்சியான உணவாகவும் உதவும்.

அகத்திப்பூவானது சுருட்டு முதலிய புகைகளாலும், வெயில் முதலான உஷ்ணங்களாலும் உண்டாகும் பித்தத்தைப் போக்குங்குணமுடையது.

அகத்திவேரானது வெள்ளை, தாஹம், கை கால் கண் முதலிய அவயவங்களின் எரித்தல் இவைகளைப் போக்கும்.

செவ்வகத்தி அனேக விந்தூரங்களும் பஸ்மங்களும் செய்ய உதவும்.

---

## KASAULI PASTEUR INSTITUTE.

### கஸாலி பாஸ்டர் விஷவைத்தியசாலை.

வெறி பிடித்த நாய்களின் வாயிலிருந்து ஊறும் உமிழ்நீரில் ஒரு விதமான விஷம் இருப்பதால் அவ்வித நாய்கள் மனிதரைக் கடிக்கும்போது அவ்விஷம் மனித தேஹத்தினுள் பற்றிப் பரவி விடுகின்றது. அதனல் உண்டாகும் வியாதியானது 'ஜலாக்கவிஷரோகம்' என்று ஸம்ஸ்கிரதத்திலும், 'ஹைட்ரோபோபியா' (Hydrophobia) என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படுகிறது. வெறிநாயின் விஷத்தினல் எவ்வித ஆபத்துகள் நேரிடுகின்றனவென்பதை அனைவரும் அறிந்திருக்கின்றனர். இந்த விஷத்தினுலுண்டாகும் தீங்குகளை நிவ்ருத்திப்பதற்காக பாஸ்டர் என்பவருடைய பெயரால் பஞ்ஜாபில் கஸாலி என்கிற இடத்தில் ஒரு விஷவைத்தியசாலை ஏற்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள நாய் கடிவைத்திய சாலைகளுள் இதுதான் மிகப் பெரிது.

ஆதியில் கஸாலியில் ஒரே இடத்தில் தான் இவ்வித விஷவைத்திய சாலை ஏற்பட்டது. இப்பொழுது சென்னைமாகாணத்திலும் குன்னூரில் இதேமாதிரி வைத்தியசாலை ஒன்று ஏற்பட்டிருப்பதை பலர் அறிந்திருக்கக்கூடும். பர்மாவிலும், ஆஸாம் நாட்டிலுங்கூட இப்பொழுது இப்படிப்பட்ட விஷவைத்தியசாலை ஏற்படப்போவதாகத் தெரியவருகிறது. கஸாலி பாஸ்டர் விஷவைத்தியசாலையின் 12-வது வருஷத்திய ரிபோர்டினுல், அவ்வைத்தியசாலையில் 1900வது வருஷத்தில் 321 பேரும், 1912-ம் வருஷத்தில் 3548 பேரும் ஜலாக்கவிஷரோக சிகித்ஸைக்காக வந்து ஸ்வஸ்த்த மடைந்தார்

கள் என்று அறியப்படுகிறது. இவ்வித விஷ சிகித்ஸைக்காக அபிப்பிராயம் தெரிந்துகொள்ள வந்தவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட ரோகிகளின் தொகையில் சேரவில்லை. இத்தொகையையும் சேர்த்தால் ரோகிகளின் எண்ணிக்கை அங்கு மிகவும் அதிகப்படுமோம். காலக்ரமத்தில் இந்தியாவிலும் பர்மாவிலும் ஏற்படப்போகும் இவ்விதமான நாலைந்து விஷ வைத்திய ஸ்த்தாபனங்களிலும் சேர்ந்து 8000 முதல் 10,000 ஜனம் வரையில் சிகித்ஸை செய்துகொள்ள ஸௌகரியங்கள் ஏற்படலாம். கிரேட் ப்ரிடனிலும் மற்றும் ஐரோப்பிய தேசங்களிலும் அளர்க்கவிஷத்தினால் நேரிடும் கஷ்டங்களை வேருடன் களைய அனேக ஏற்பாடுகளும் சட்டங்களுமுண்டு. இத்தேசத்திலும் முனிஸிபல் எல்லைக்குள் நாய்களால் நேரிடும் தீங்குகளைப் போக்குவதற்கு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கஸாலி விஷ வைத்தியசாலையானது 12 வருஷகாலமாக வெகு ஜனங்களின் பிராணனைக் காப்பாற்றி மேன்மேலும் விருத்தியடைந்து மஹோபகாரம் செய்து வருவதுபோல், நமது மாகாணத்திலும் குன்னூரிலுள்ள விஷவைத்தியசாலை ஜனங்களுக்கு அனேக நன்மைகளைச் செய்யக்கூடுமென்று நம்புகிறோம். ஆஸாம் முதலிய வேறு மாகாணங்களிலும் இவ்வித வைத்தியசாலைகள் ஏற்படுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

---

## BOGUS MEDICAL DEGREES.

### போலி வைத்தியப் பட்டங்கள்.

இந்தியாக் கவர்ன்மெண்டின் சட்ட ஸபையில் வைத்திய விஷயமான ஒரு மஸோதாவை பிரேரிப்பதாக உத்தேசித்த, இந்தியாக் கவர்ன்மெண்டாரால் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கும் ஜனத்தலைவர்களுக்கும் சற்றுக்கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தின் ஸாராம்சமாவது:—

மாகாணக்கவர்னர்களுக்கும், லெப்டினெண்ட் கவர்னர்களுக்கும், மற்றும் சீப் கமிஷனர் முதலியவர்களுக்கும் கவர்னர் ஜெனரலவர்கள் அறிவிப்பதாவது:—யூனிவர்ஸிடிகளுக்கு ஸம்பந்தப்படாத மெடிகல் காலேஜுகளில் படித்தவர்கள் யோக்யதையற்றவரென்றும், யூனிவர்ஸிடிகளுக்கு ஸம்பந்தப்பட்ட காலேஜுகளில் பயிற்சி பெற்றவருக்குக் கொடுக்கப்படும் பட்டங்களை வேறெவரும் உபயோகிக்கக் கூடாதென்றும், இங்கிலீஷ் வைத்திய முறை ஆங்காங்கு ஜில்லாக்கள் தோறும் பரவி, பெரும்பான்மையோரால் அவ்வைத்தியமுறை அங்கீகரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருவதே இதற்குப் போதுமான காரணமாகுமென்றும் இந்தியாக்கவர்ன்மெண்டு அபிப்பிராயப்படுகிறது. ஸர்க்கார் வேலைகளில் அமர்ந்திருப்பவரும், ஸர்க்காரிடமிருந்து யோக்யதைகள் பட்டங்கள் இவற்றைப் பெற்றவருமான சிறந்த வைத்தியர்களை நன்கு ஆதரிப்பதும், சிலவகையான வைத்திய காலேஜுகளில் படித்தும் வைத்தியத் தொழில் செய்து கொண்டுமிருக்கும் வைத்தியர்களென்று சொல்லிக்கொள்ளும் நபர்களை அவ்வழியிலிருந்து தடுப்பதும் மிகவும் அவசியம்.

ஆனால் ஆயுர்வேத யூனானி வைத்தியகளுக்கும் அவ்வித காலேஜுகளுக்கும் இதனால் ஏதேனும் நிர்ப்பந்தங்கள் உண்டாக்குவதாக தற்காலம் கவர்ன்மெண்டாருக்கு யோசனையில்லை.

இவ்விதமாக இங்கிலீஷ்வைத்தியரில் யோக்யதையுள்ளவரை ஆதரிப்பது அவசியமானதால், அதற்காக, இந்தியாவில் யூனிவர்ஸிடிகளுக்கு ஸம்பந்தப்படாத ஒரு வைத்திய கலாசாலை இருந்தால் அவ்வித காலேஜ் அல்

லது ஸ்த்தாபனத்தை பிராஸிக்யூஷன் செய்ய வேண்டும்; இராஜாங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட காலேஜுகளில் சேருவதற்கு வேண்டிய யோக்யதை யில்லாதவன் வெளிதேசம் சென்று ஏதேனும் ஓரிடத்தில் தகாத விதமாக ஒரு பட்டப்பெயரைப் பெற்று இந்தியாவுக்குள் வைத்தியம் செய்ய வந்தால் அம்மனிதனையே பிராஸிக்யூஷன் செய்யவேண்டியது.

ஒவ்வொரு மாகாணத்திலும் வைத்திய ஆலோசனைஸங்கம் (Medical Council) ஸ்தாபிக்கவேண்டியது மிகவும் அவசியம். எவ்வித யோக்யதையுள்ளவனை ரெஜிஸ்டர் செய்யக்கூடுமென்று தீர்மானிப்பதற்கும், சில காலமாயிருந்து வருவதும் புதிதாக ஏற்படுவதுமான வைத்திய கல்விச்சாலைகளில் பாடகிரமங்கள் அல்லது விஷயங்களையும் தகுந்த உபாத்தியாயர்களையும் சிபார்சு செய்வதற்கும் இந்த ஆலோசனை ஸங்கத்திற்கு அதிகாரமும் கொடுக்க வேண்டும்.

இவ்விதமான ஏற்பாடு செய்வது உசிதமாகயிருக்குமா வென்று ஆங்காங்குள்ள சிறந்த வைத்தியர் முதலானவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதில் எவருக்காவது ஏதேனும் ஆக்ஷேபமிருந்தாலும், பரிசீலனை செய்ய வேண்டியது ஏதாவதுண்டானாலும், இஷ்டமுள்ளவர் நாளது அக்டோபர்மீ 15ம்தேதிக்குள் இந்தியாக்கவர்ன்மெண்டுக்கு எழுதலாமென்றும் அக்கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சுற்றுக் கடிதத்தினால் இந்தியாக் கவர்ன்மெண்டின் நோக்கத்தை யறிந்து, கல்கத்தாவிலுள்ள அனேக வைத்திய மாணுக்கர்களும் * வேறு சிலருமாக சென்ற ஆகஸ்டுமீ 5௳ ஒரு ஸபை கூடி, இதன்மேல் சில தீர்மானங்கள் செய்தார்கள். அதன் ஸாராம்சமாவது.--

போகஸ் (Bogus) அல்லது போலி என்கிற பெயரைக் கவர்ன்மெண்டார் உபயோகிப்பது அழகல்ல. இங்குள்ள வைத்தியகலாசாலைகளில் உயர்ந்த யோக்யதைகள் பெற்ற உபாத்தியாயர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவற்றில் பயிற்சிபெற்றவர்கள் இரயில்வேக்களிலும், கப்பல்களிலும், பெரிய கம்பெனிகளிலும் திறமையுடன் உத்தியோகம் செய்து வருகிறார்கள். நாகரிகம் செழித்த ஐரோப்பிய தேசங்களிலும் இவை போன்ற அனேக கலாசாலைகள் நடைபெறுகின்றன. இவைகளாலும் இன்னும் சில காரணங்களாலும் இராஜாங்கத்தார் இந்த கலாசாலைகளை ஆதரிக்கவேண்டும். வேண்டுமானால் கவர்ன்மெண்டாரே சில தகுந்த கல்விமான்களைச் சேர்த்து, பரீக்ஷகஸங்கம் ஒன்று ஏற்படுத்தி இக்காலேஜுகளில் படிப்பவரைப் பரீக்ஷித்து, அதன்மேல் தகுந்த பட்டங்களை அவர்களுக்குக் கொடுப்பது உசிதமாகும், இப்படியாக அந்த ஸபையோர் வெகு வணக்கத்துடன் கவர்ன்மெண்டாரிடம் விண்ணப்பம் பண்ணிக்கொண்டதுடன், ஆங்காங்குள்ள வைத்திய ஸங்கங்களும் தமக்கு அனுகூலமாக அபிப்பிராயம் கொடுக்கவேண்டுமென்றும் அந்தந்த ஸங்கங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

---

* கல்கத்தாவில் யூனிவர்ஸிடிக்கு ஸம்பந்தப்படாத இரண்டொரு வைத்திய கலாசாலைகள் உண்டு. நேஷனல் மெடிகல் காலேஜ் என்கிற ஒரு கலாசாலையில் படித்துத் தேறிய மாணுக்கருக்கு L. M.& S. முதலிய சில வைத்தியப்பட்டங்களையும் கொடுத்து வருகிறார்கள். ஆகையால் தான் அந்த மாணுக்கர்களும் வேறு சிலரும் கல்கத்தாவில் இதற்காக ஸபை கூடினார்கள்.

# NOTES AND ITEMS INTEREST.

## பல்வகைக் குறிப்புகள்.

**வைத்தியரத்ன என்கிற பட்டம்:**—ஆயுர்வேத வைத்தியர்களில் சிறந்த யோக்யதையுடையவர்களுக்கு இராஜாங்கத்தார் "வைத்தியரத்ன" என்கிற பட்டமளிப்பதாகப் போன வருஷத்தில் ஏற்படுத்தினார்கள். சென்ற வருஷத்தில் கல்கத்தாவில் பிரபல வைத்தியரான கவிராஜ் ஜோகேந்த்ரநாத்ஸேன் M.A., அவர்களுக்கும், பெர்ஹாம்பூரிலுள்ள ஸ்ரீ கோபாலாசாரியர் என்பவருக்கும் அப்பட்டம் அளிக்கப்பட்டது. இவ்வருஷத்தில் ஸ்ரீமான் பண்டித டி. கோபாலாசார்லு அவர்கள் அப்பட்டத்தைப் பெற்றார்கள். இவர்களுக்கு ஆயுர்வேத சாஸ்திரத்தில் அபாரமான யோக்யதையிருப்பதும் தவிர, ஒரு ஆயுர்வேத காலேஜையும் ஸ்தாபித்து, இதன் மூலமாய் அனேக வித்யார்த்திகளைப் படிப்பித்து, இச்சென்னை மாகாணத்தில் ஆயுர்வேதத்தைப் பரவச்செய்ய இவர் மூல புருஷராகவும் ஏற்பட்டாராகையால், இவ்விதம் இராஜாங்கத்தாரிடமிருந்து பட்டம் பெற்றது எவ்விதத்திலும் ஏற்றதாகும். இவ்விதமே சென்னைச் சட்டஸபையில் ஒரு மெம்பராகவும், யூனானி வைத்திய சிரேஷ்டராயும் இருக்கும் ஹானரபுல் மிஸ்டர் ஜைனுலாபுதீன்ஸாஹெப் அவர்களுக்குப் புதிதாக 'ஷம்ஸ்-உல்-முல்க்' என்கிற பட்டமும் முன்னால் அளிக்கப்பட்டது. கவர்ன்மெண்டார் இப்படி ஆயுர்வேத யூனானி வைத்தியர்களைக் கௌரவிப்பதற்காக இவ்வித ஏற்பாடு செய்ததைப்பற்றிக் கவர்ன்மெண்டாருக்கு நாம் நன்றி பாராட்டுவதுடன், மேற்கண்டவர்கள் அவ்விதபட்டம் பெற்றதற்காகவும் ஸந்தோஷப்படுகின்றோம்.

**டில்லியில் ஒரு ஆயுர்வேத யூனானி கலாசாலை.**—ஆயுர்வேத-யூனானி வைத்திய சாஸ்திரங்களை இக்காலத்திய முறைகளுக்கேற்றவாறு கற்பிப்பதற்காக ஒரு வைத்தியகலாசாலை சீக்கிரத்தில் ஏற்படப்போகிறது. இதற்காக இப்பொழுது வேண்டிய திரவியம் சேர்ந்திருக்கிறது. பாடியாலாமஹாராஜா 25000 ரூபாய் உதவியதாகவும், வேறு சில இராஜாக்களும் கனவான்களும் பிரதிவருஷமும் ஆயிரக்கணக்காக உதவுவதாக வாக்களித்திருக்கிறதாகவும் அறிகிறோம். இந்த ஸ்தாபனத்தின் விதிகளையனுஸரித்து 'வைத்திய' என்கிற பரீக்ஷைக்கு 3-வருஷமும், 'வைத்திய சூடாமணி' என்கிற பட்டத்திற்காக அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று வருஷமும் அந்த கலாசாலையில் கல்வி கற்க வேண்டுமாம்.

**வைத்திய ரெஜிஸ்டர் மஸோதா:**—ஹானரபுல் டாக்டர் நாயர் அவர்கள், யோக்யதையுள்ள வைத்தியர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டி ஒரு மஸோதாவை (Medical Registration Bill) சென்னைச் சட்டஸபையில் பிரேரித்திருக்கிறார் என்பது அனேகருக்குத் தெரிந்திருக்கும். அதில் இங்கிலீஷ்வைத்தியர்கள்தான் ரெஜிஸ்டர் செய்துகொள்ள உரியவராக வேண்டுமென்றும், ஸர்டிபிகேட்டுகளில் கையெழுத்திடவும், ஆஸ்பத்ரிகள், வைத்திய ஸுகாதார ஆபீஸுகள் முதலிய விடங்களில் அப்படி ரெஜிஸ்டர் செய்துகொண்ட இங்கிலீஷ் வைத்தியர்களே உத்தியோகம் வஹிக்கத் தகுந்தவராவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆயுர்வேத யூனானிவைத்திய முறைகளுக்கும் இந்த மஸோதாவுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்று கடைசியில் கூறப்படுகிறது. இப்படி இவ்வைத்திய முறைகளை விலக்கியிருப்பதால், மேலுக்கு சுதேசவைத்தியர் இம்மஸோதாவினால் பாதிக்கப் படமாட்டாரென்று சிலர் எண்ணக்கூடுமாயினும், அப்படி விலக்கியிருப்பதே சுதேசவைத்தியர்களுடைய தொழிலுக்கும் பொது ஜனங்களுக்கும் மிகவும் பாதகமாய் முடியும். இம்மஸோதாவைப் பற்றி அடுத்த முறை விஸ்தாரமாய் விசாரிக்க உத்தேசித்திருக்கின்றோம்.

**வைத்திய மஸோதாவும் மைசூர்க் கவர்ன்மெண்டும்:**—வைத்தியப் பதிவு சட்ட விஷயமாக மைசூர்க்கவர்ன்மெண்டார், விருப்பத்துடன் கவனிக்கக்கூடியதான ஒரு விளம்பரத்தை அடியிற்கண்டவாறு பிறப்பித்திருக்கிறார்கள்:—மைசூர்க்கவர்ன்மெண்டார் மைசூரில் ஆயுர்வேதகலாசாலை ஸ்தாபித்ததற்குள்ள உத்தேசங்களுள், சுதேச முறைப்படி அபாயமில்லாத வழியில் வைத்தியம் செய்யக்கூடிய சில வைத்தியர்களை ஜனங்களுக்கு உதவுமாறு பரவச் செய்வது நலமென்று தீர்மானித்ததே முக்கியமானதாகும். இந்த ஆயுர்வேதகாலேஜில் படித்தவர்களுக்கு அவரது பயிற்சிக்கும் கல்விக்கும் ஏற்றதாக ஒரு யோக்யதாபத்திரம்

கலாசாலையின் தலைவரைக்கொண்டு அளிக்கப்பட வேண்டுமென்றும், அதனால் ஒரு வைத்தியசாலையை நிர்வஹிக்கக் கூடிய யோக்யதையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் மைசூர்ச் கவர்ன்மெண்டார் விரும்புகிறார்கள்.

இலண்டனில் வைத்தியமஹாஸபை:—சென்ற ஆகஸ்டுமாதம் முதல் வாரத்தில் இலண்டன் நகரத்தில் நாநாதேசிய வைத்திய வித்வான்களுடைய மஹாஸபை (The International Medical Congress.) ஒன்று நடை பெற்றது. இந்த ஸபைச்கு 6000-க்கு மேல் 7000 பேர் வரையிலும் வந்திருந்தார்கள். எல்லோரும் வியாபகர்களான வைத்திய வித்வான்கள். இந்த ஸபையில் வைத்திய ஸம்பந்தமான 23 சாஸ்திரங்கள் ஆலோசிக்கப்பட்டன. நமது தென்னிந்தியாவில் மாத்திரம் சுதேச வைத்தியர்கள் இலண்டனில் கூடிய வைத்தியர்களை விட ஐந்து மடங்குக்கும் அதிகமாயிருப்பார்கள். இவர்கள் இப்படி சேருவதுண்டா? சுதேச வைத்தியாபிவ்ருத்தி விஷயமாய் ஏதாவது ஆராய்ச்சி செய்ய எவ்வைத்தியருக்காவது எண்ணமுண்டா? ஒரு வைத்தியமுறையைப்பற்றி மாத்திரம் 23 சாஸ்திரங்கள் இங்கிலீஷில் உண்டு. நமது தமிழ் வைத்தியத்தில் எத்தனை சாஸ்திரங்கள்? இந்த மஹாஸபையில் நடந்தேறிய விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

பஞ்ஜாபில் நடந்த ஸுகாதார விஷயாலோசன ஸபை:—சென்ற ஆகஸ்டுமீ 25உ பஞ்ஜாபில் லெப்டினண்ட் கவர்னரின் அக்ராஸனத்தின் கீழ் ஸுகாதார விஷயாலோசன ஸபை (Punjab Sanitary Conference) ஒன்று நடந்தேறியது. இந்த ஸபையில் மலேரியா என்னும் விஷமஜ்வரம், க்ஷயம், ப்ளேக், விஷூசி முதலிய ரோகங்களைப் பற்றிய விசாரங்கள் நடந்தன. அங்கு நடைபெற்ற விஷயங்கள் விசேஷமாக பஞ்ஜாப் மாகாணத்தின் ஸுகாதார ஏற்பாட்டைப் பற்றியவைகளாயிருந்தன. ஜனங்கள் கொய்னா தீங்கு செய்வதாக எண்ணுகிறார்களென்றும், ஆனால் அவ்விதம் தீங்கு நேரிடுவதில்லை யென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

தாய்ப்பாலை விருத்தி செய்தல்:—ஆட்டுப்பாலை பிரஸவித்த ஸ்த்ரீக்குக் கொடுத்தால் முலைப்பால் சுரக்கு மென்று சொல்லுகிறார்கள். வெங்காயத்தை பிரஸவித்த ஸ்த்ரீ உணவாக எடுத்துக் கொண்டால் பால் சுரப்பது கிரமமாக நின்றுவிடும். பரித்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் ஸத்தை(Extract) உட்கொள்ளும் ஸ்த்ரீக்கு விசேஷமாகப் பாலுண்டாகும். இதைக் காரணமாகக் கொண்டே பசுக்களுக்கும் பரித்திக் கொட்டையை உணவாகக் கொடுக்கிறார்கள். இவ்வாறு மெடிகல் கௌன்ஸில் என்கிற வைத்திய பத்திரிகை வரைகின்றது. நமது வைத்தியரில் நிபுணராயிருப்பவர் பரித்திவித்துகளிலிருந்து ஸத்தை எடுத்து இவ்விதமாக உபயோகிக்க முயல்வது நலம்.

வாழைப்பழம் மிகவும் போஷணசக்தியுள்ளது: "கதளீ ந கதாசந-வாழைப்பழம் எப்பொழுதும் உபயோகிக்கத் தகுந்தல்ல" என்று அனைவரும் சொல்வது வழக்கம். வாழைப்பழம் நல்ல ஸத்துள்ள பதார்த்தமென்றும், ஆனால் அது சீக்கிரம் ஜீர்ணமாகாதென்றும் வெகு காலங்களாக அனேகவைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், புதிய ஆராச்சியினால் அந்த வார்த்தைகள் ஆதாரமற்றவையென்று விளங்குகிறது. வாழைப்பழம் போஷண சக்தியுள்ள சிறந்த வஸ்து வென்பது மாத்திரமல்ல, அது வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமும் ஆகக் கூடியது. பார்வைக்கு அழகாய் மினுமினுப்புள்ள பழங்கள் சிறந்தவை யல்ல. நன்கு கறுத்து சில புள்ளிகளுடன் கூடியதான பழமே நன்றாகக் கனிந்திருக்குமாகையால் அவை, ஸாப்பிட்டவுடனே ஜீர்ணமாய் விடும். இவ்விதம் கனிந்த பழத்தைப் போல், உலர்ந்த வாழைப்பழம் எளிதில் ஜீர்ணமாகாது. அப்படி உலர்ந்த கனிகளை ஜலத்தில் சிறிது நேற வைத்து அதன் பின் உபயோகிப்பது உசிதம். வாழைப்பழம் வாயிலிட்ட வுடனே மெல்லப்படாமலே கரைந்து விடுவதும், ஒருவன் இருபது பழமானாலும் கஷ்ட மின்றியே ஸாபபிடக் கூடு மென்பதும் அனைவருக்கும் தெரிந்த விஷயம். சரீரத்திற்கு வேண்டிய கொழுப்பை யுண்டாக்குவதிலும், மற்றும் போஷண சக்தியிலும் இப்பழம் மிகவும் சிலாக்கியமானது. உருளைக் கிழங்கை விட இதுவே அதிகமாகக் கொழுப்பை யுண்டாக்கும். ஒரு விஷயம் இதில் விசேஷமானது. அதாவது, கனிந்த மெதுவான பழத்தில் 100 க்கு 22 பாகம் சர்க்கரையும், உலர்ந்து விட்டால் 70 பாகம் சர்க்கரையும் இருக்கும்.. இவ்விதம் பார்மக்யூடிகல் (Pharmaceutical) என்கிற வைத்திய பத்திரிகை கூறுகிறது.